உ

சிவமயம்



யாழ்ப்பாணம் மாதகலைப் பிறப்பிடமாகவும்,

பிரான்சை வதிவிடமாகவும் கொண்ட

# அமரர் திரு. விஸ்வலிங்கம் பொன்னுத்துரை

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# பொன் மலர்

17.08.2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



யாழ்ப்பாணம் மாதகலை பிறப்பிடமாகவும்
பிரான்சை வதிவிடமாகவும் கொண்ட

## அமரர் திரு. விஸ்வலிங்கம் பொன்னுத்துரை

அவர்களின் சிவபதப்பேற்றில் மலர்ந்த

# பொன்மலர்

17. 08. 2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எங்கள் குடும்ப குலவிளக்காய்
ஓயாது ஒளிரும் தீபமாய்
ஓங்கி ஒலிக்கும் நாதமாய்
வாழும் காலம் எல்லாம் வழிகாட்டி
மனிதருள் மாணிக்கமாய்
அன்பு கனிந்த பேரொளியாய்
இன்சொல் பேசி
அன்புடன் எம்மைப் பேணி
காத்து கல்வி புகட்டி அனைவருடனும்
பாசத்துடனும் நேசத்துடனும்
இறக்கும் வரை இன்முகத்தினராய்
வாழ்வாங்கு வாழ்ந்து இன்று
வானுறையும் தெய்வமாகிவிட்ட
எமது அன்புத் தெய்வத்தின்
திருப்பாதங்களில் இப்பொன்மலரினைக்
காணிக்கையாக்குகின்றோம்.

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!*

இங்ஙனம்

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# பஞ்சபுராணம்

## விநாயகர் துதி

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத் தானைக்
காதலால் கூப்புவர் தங்கை.

திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

எத்தாயர் எத்தந்தை எச்சுற்றத்தார்
எம்மாடு சும்மாடாம் ஏவர்நல்லாள்
செத்தால் வந்து தவுவார் ஒருவரில்லை
சிறுவிறகால் தீமூட்டிச் செல்லாநிற்பர்
சீத்தாய வேடத்தாய் நீடு பொன்னித்
திருவானைக் காவுடைய செல்வாயென்றன்
அத்தாவுன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லகண்டங் கொண்டடியேன் என்செய்கேனே.

## திருவாசகம்

வான நாடரும் அறியொணாத நீ
மறையில் ஈறுமுன் தொடரொணாத நீ
ஏனை நாடரும் தெரியொணாத நீ
என்னை இன்னிதாய் ஆண்டு கொண்டவா
ஊனை நாடகம் ஆடுவித்தவா
உருகி நான் உனைப் பருகி வைத்தவா
ஞான நாடகம் ஆடுவித்தவா
நைய வையகத்து உடைய விச்சையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

இவ்அருவம் பிறவிப்பெளவ நீர் நீர்த்தும் ஏழையேற்கு
என்னுடன் பிறந்த ஐவரும் பகையே யார் துணை என்றால்?
அஞ்சல் என்று அருள் செய்வான் கோயில் கைவரும்
பழமை குழைந்த செஞ்சாலிக் கடைசியர் களைதரு
நீலம் செய்வரம்பும் அரும்பும் பெரும்பற்றப் புலியூர் திருவளா

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்றதார் பெருவாருலகில்
ஊரும் உலகுங்கழற உழறி உமை மண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

பரமனை மதித்திடாப் பங்க யாசனன்
ஒருதலை கிள்ளியே ஒழிந்த வானவர்
குருதியு மகந்தையும் கொண்டு தண்டமும்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்.

## திருப்புகழ்

பிறவியலை யாற்றினிற் புகுதாதே
பிரகிருதி மார்க்கமுற் றலையாதே
உறுதிகுரு வாக்கியப் பொருளாலே
உனது பதகாட்சியைத் தருவாயே
அறுசமய சாத்திரப் பொருளோனே
அறிவுளறி வார்க்குணக் கடலோனே
குறுமுனிவனேத்து முத்தமி ழோனே
குமரகுரு கார்த்திகைப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வாழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரக செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# அமரர் வி. பொன்னுத்துரை
அவர்களின்
# வாழ்க்கைச் சுவடுகள்

மாதகல் கிராமம் பண்டைய சிறப்புக்களை உடையது. இக்கிராமத்தவர்கள் தத்தம் தொழிலை மேற்கொண்டு தமது வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்த இடையறாது உழைக்கின்றனர். இக்கிராமத்தில் பெரிய பணக்காரர்களோ, முதலாளிகளோ கடை உரிமையாளர்களோ இல்லை. குறிப்பிட்டுச் சொன்னால் சிறு கடை உரிமையாளர்களும், விவசாயிகளும், விவசாயத்தொழிலாளிகளும் மற்றும் கடற்றொழிலாளர்களுமான உழைப்பாளர் வர்க்கமே அதிகமாகக் காணப்படுகின்றனர். விவசாயிகளில் பெரும்பாலானோர் சிறுநில உரிமையாளர்களே. இவர்களில் பெரும்பாலானோர் பத்து அல்லது இருபது பரப்புக் காணிக்குச் சொந்தக்காரர்களே. உண்மையாக உழைக்கும் விவசாயிக்கு தனது குடும்பத்தை போஷிக்க இருபது பரப்புக் காணி போதாது. ஆகக்குறைந்தது இரு ஏக்கர்காணி தேவைப்படும். இங்குள்ள விவசாயிகளின் ஏழ்மை நிலை அவர்கள் வாழ்க்கையைப் பாதித்தது. இங்கு விவசாயத்தில் ஈடுபடும் குடும்பங்களில் திரு. வி. பொன்னுத்துரையின் குடும்பமும் ஒன்று. பலரால் பெருமை பேசப்படும் வேளாண்குடி மரபில் வந்தவர் முருகர். இவர் மாதகல் மேற்கில் வாழ்ந்தவர். மாதகல் மேற்கு நுணசைப்பகுதி பிரபல்யமானது. இங்கு சுண்ணக்கல் வளமும், தென்னை வளமும் காணப்பட்டது. மக்களின் வாழ்வாதாரத்திற்கு துணை அளிக்கும் வளங்களாக அவை காணப்படுகின்றன. இங்குள்ளோர் விவசாயம் கடற்றொழில் ஆகிய தொழில்களை நம்பியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்கின்றனர். முருகர் மக்களாக இராமு, வேதாரண்யம், சுப்பர், கணபதி, வள்ளி, கற்பகம் பிறந்தனர். இவர்களில் வேதாரண்யம் எனப்படும் வேதப்பா கட்டிளமைப் பருவம் எய்தியதும் பெற்றோர் அதே ஊரைச்சேர்ந்த வள்ளி என்னும் நாமம் கொண்ட பெண்ணை திருமாங்கல்யம் செய்து வைத்தனர். அவர்தம் இல்லற வாழ்வு நல்லற வாழ்வாக மலர்ந்தது. அவர்களின் நுணசையம்பதி முருகன் அருளால் விஸ்வலிங்கம், சங்கரப்பிள்ளை என்ற நாமங்களைச் சூட்டப்பட்ட இரு புதல்வர்கள் தோன்றினர். இவர்களில் விஸ்வலிங்கம் தனது ஆரம்பக் கல்வியை மாதகல் மேற்கில் அமைந்த அமெரிக்கன் மிஷன் கலவன் பாடசாலையில் கற்றார். அக்காலம் கல்வியில் நாட்டமின்றியிருந்த காலப்பகுதி. உழைப்பையே மேன்மைப் படுத்திய காலம். அக்காலத்தில் தந்தை தன் மகனிற்கு தனது தொழிலையும் அதன் நுட்பங்களையும் கற்றுக்கொடுத்தார். இக்காலத்தில் சுண்ணக்கல் அகழ்ந்து வெட்டி எடுத்தனர். பின் அதனை மெருகுபடுத்துவர். இக்காலகட்டத்தில் பல வீடுகள் சுண்ணக்கற்களால் கட்டப்பட்டவை. இவை தந்தையர் தன் மகனுக்கு விவசாய நுட்பங்களைக் கற்பித்து விவசாயியாக மாற்றினார். அத்தோடு கைத்தொழிலான சுண்ணக்கற்களைக் கிளறி மெருகுபடுத்தும் திறனைக் காட்டிக்கொடுத்து அத்தொழிலிலும் ஈடுபடுத்தினார். மணப்பருவம் வந்துற்ற வேளையில் இவருக்கு மணப்பெண் தேடினர். அவரின் உறவுமுறையில் வாழ்ந்த சிதம்பரப்பிள்ளை கற்பகம் தம்பதினரின் மகளான தெய்வானையைத் தேர்ந்தெடுத்தனர். பெரியோர்கள் நிச்சயித்த நல்ல நாளில் இருவரையும் கரம்சேர்த்து திருமாங்கல்யம் பூணுவித்தனர். பெண்ணுக்குத் தாலி ஏறினால் காலுக்குக் கட்டுப்பாடும் வந்துவிடும் என்பார்கள். அந்த வகையில் தமிழர்களிடையே கட்டுப்பாடுகள் மிகுந்த காலம். இந்த வகையில் இணைக்கப்பட்ட தம்பதியினர் தம் குடும்ப வாழ்வில் சிறந்து விளங்கினர். அவர்கள் நற்காரியங்கள் செய்து வந்தனர். வந்தாரை வரவேற்கும் பண்பாட்டு விழுமியங்களைக் கைக்கொண்டு அவர் தமக்கு விருந்தளித்து மகிழ்ந்தார். இதன் பயனாக இவர்கட்கு நான்கு தவப்புதல்வர்கள் அவதரித்தனர். சங்கரப்பிள்ளை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லத்துரை, சின்னத்துரை, பொன்னுத்துரை என்போர் ஆவார். இவர்களில் செல்லத்துரை கிளிநொச்சி - கனகபுரம் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட குடியேற்றத்திட்டத்தில் குடியேறி சிறந்த விவசாயியாகத் திகழ்ந்து 2007 அமரத்துவம் எய்தினார். இவரின் அண்ணியராக சங்கரப்பிள்ளை - கற்பகம் செல்லத்துரை - சின்னத்தங்கம், சின்னத்துரை - நாகரத்தினம் என்போர் இவர்பால் பாசம் காட்டினர். சங்கரப்பிள்ளை சின்னத்துரை ஆகியோர் மாதகலில் விவசாயத்தில் ஈடுபட்டு இன்றும் வாழ்ந்து வருகின்றனர்.

திரு. பொன்னுத்துரை அவர்கள் 14. 04. 1954ல் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை மாதகல் மேற்கு நுணசை வித்தியாலயத்தில் கற்றுத்தேர்ந்தார். தன் இடைநிலைக்கல்வியை யா/மாதகல் சென். யோசவ் மகாவித்தியாலயத்தில் கற்று க. பொ. சாதாரண தரப்பரீட்சைக்கு தோற்றி சித்தியடைந்தார். அதன் பின்னர் உயர்தரக் கல்வியை தொடர வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியில் இணைந்தார். அங்கு தொடர்ந்து கல்வி கற்று க. பொ. த. உயர்தரத்தில் சித்தியெய்தினார். 1971ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட பல்கலைக்கழக அனுமதிக்கான தரப்படுத்துதல் திட்டத்தால் பல தமிழ் மாணவர்கள் கூடிய புள்ளிகள் பெற்றும் பல்கலைக்கழக அனுமதி மறுக்கப்பட்டனர். இந்த வகையில் பாதிக்கப்பட்டவர்களில் திரு. பொன்னுத்துரையும் ஒருவர். இதனால் விரக்தியடைந்த பல தமிழ் இளைஞர் நீதி கேட்டு போராடத் தொடங்கினர். இவ்வகையான போராட்டங்களால் ஈர்க்கப்பட்ட பொன்னுத்துரை தமிழ்ஈழக் கொள்கையில் பற்றுக்கொண்ட தமிழ்ஈழ விடுதலைக்கழகத்தில் உறுப்பினர் ஆனார். அதன் கொள்கையான இடதுசாரிக் கொள்கைகளில் பற்று வைத்து கார்ல்மாக்ஸ், லெனின் கொள்கைகளை அரசியல் வகுப்புக்கள் மூலம் தெளிந்து கொண்டார். இக்காலத்தில் சேகுவராவின் புரட்சிப்பாதையில் தன்னை இணைத்துக்கொண்டு புரட்சி வீரனாக, தமிழ் புரட்சியாளனாக செயற்பட்டார். புளொட் அமைப்பு காந்தீயம் என்ற அமைப்பின் ஊடாக தமது கொள்கைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னெடுத்தனர். காந்தீயம் சோசலிசக் கொள்கைகளை தன்னகத்தே கொண்டிருந்தது. காந்தீயம் என்ற நிறுவனம் ஊடாக பல திட்டங்களை முன்னெடுத்து மக்களை அதன்பால் நாட்டம் கொள்ளச்செய்தனர். இந்த காந்தீய நிறுவனத்தில் முக்கிய தலைவராக விளங்கி அதன் செயற்பாடுகளை விஸ்தரிப்பதிலும், மக்களை ஒன்று திரட்டுவதிலும் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். இதன் காரணமாக தேடப்படும் நபரானார். இலங்கை அரசு தமிழீழப் போராட்டத்தை அடக்க இராணுவத்தையும், பொலிஸ் படையையும் பயன்படுத்தியது. தேடப்படும் நபராகக் கண்டுகொள்ளப்பட்டதும் மறைந்து வாழும் நிலை ஏற்பட்டது. இவரது தந்தையார் இவரின் சிறுவயதிலே இறக்கவும் தாயின் அரவணைப்பில் வளர்ந்தார். கண்ணும் கருத்துமாய் வளர்த்த தாயிடம் அன்போடுஉறவாட, விரும்பிய உணவை உண்ண, நிம்மதியாக வீட்டில் படுத்துறங்க முடியாத நிலையில் இருந்தார். காடுகளும், பனந்தோட்டங்களும் பல நாட்களில் இவருக்கு அபயமளித்தன. போராட்டமென்பது முள்ளின் பாதை, மரணத்தைத் தேடும் வழி என்பதை அறிவர். இவ்வகையான போராட்டத்தில் தமிழீழக் கனவுடன் பல குழுக்கள் செயற்பட்டன. ஆனால் இவைகளிடையே இணக்கமான போராட்ட வழியை ஏற்படுத்த முடியவில்லை. போட்டியின் உச்சகட்டத்தில் வெளிநாட்டிலும், உள்நாட்டிலும் பல தமிழீழக் கனவில் மிதந்த தலைவர்கள் சக குழுவொன்றினால் கொல்லப்பட்டனர். இக்குழுக்களிடம் இணக்க அரசியல் மூலம் போராட்ட தந்திர உத்திகள் ஏற்பட்டமையால் தமிழீழம் போர்க்களமாகி, தமிழீழம் காணப்புறப்பட்ட மறவர்கள் மண்ணில் புதைக்கப்பட்டனர். இந்த வகையில் அரச பயங்கரவாதம் ஒருபுறம், சக போராட்டக் குழுவின் செயற்பாடு மறுபுறமாகவும் காணப்பட்டது. இதனால் மனமுடைந்த பலர் தாம் போற்றி வளர்த்த நிறுவனத்தை விட்டு வெளியேறினர். தனது உயிரை காப்பதற்காக தன் மண்ணை விட்டு செல்ல விரும்பாத நிலையிலும், சூழ்நிலை துரத்தி நின்றது.

இந்த நிலைமை இவ்வாறிருக்க இவர் தம் உற்றார்கள் இவரை இல்லற வாழ்வில் புகுத்த விரும்பி மாதகலைச் சேர்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பலவாணர் இராசம்மா தம்பதிகளின் கனிஸ்ட புதல்வி இரத்தினேஸ்வரியைத் தெரிவு செய்தனர். மணமகன், மணமகள் இருவர் சம்மதத்துடன் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்ட நாளில் பதிவுத் திருமணம் நடத்த நாள் குறிக்கப்பட்டது. அந்த நாளின் முதல் நாள் இரவு மாற்றுக்குழுவால் அவர் கைதியாக்கப்பட்டார். பின்னர் 29 நாட்களில் பல்வேறு விசாரணைகள், சித்திரைவதைகளின் பின் விடுவிக்கப்பட்டார். தடுப்புக்காவலில் இருந்து வெளியே வந்ததும் முன்னர் நிச்சயிக்கப்பட்ட மணப்பெண் இரத்தினேஸ்வரியுடன் 1987ல் திருமணப்பதிவு நடைபெற்றது.

1987ல் பிரான்ஸ் நாடு சென்ற பொன்னுத்துரை அங்கு அகதி அந்தஸ்துடன் வாழ்ந்து வந்தார். அவர் மனைவி பிரான்ஸ் சென்று 1988ல் அவருடன் இணைந்து கொண்டார். இவர் இல்லற வாழ்வு இனிதே தொடர்ந்தது. அதன் பயனாக 1990ம் ஆண்டு மூத்த புதல்வனாக ஒரு மகன் பிறந்தான். அவனுக்கு ஈழப்போரில் களப்பலியான விக்டரின் நாமத்தைச் சூட்டினர். 1994ல் இந்த தம்பதியனருக்கு இரண்டாவது மகன் பிறந்தான். இவனுக்கு விநோத் என்னும் பெயர் சூட்டப்பட்டது. 1995ல் இவர்களுக்கு செல்ல மகளாக விதுஷா பிறந்தாள். இவர்கள் மூவரும் பிரான்ஸ் நாட்டின் கல்வி முறையில் கல்வியைப் பயின்று வருகின்றனர். மூத்த மகன் விக்டர் கல்வியில் சிறந்து உயர்கல்வி நிறுவனமான பல்கலைக்கழகத்தில் பொறியியல் படிப்புக்கு தெரிவு செய்யப்பட்டார். இன்று பொறியியல் படிப்பில் 4வது வருடத்தில் பயின்று கொண்டு இருக்கின்றார். இவரது இரண்டாவது மகன் விநோத் கல்வியில் கவனம் செலுத்தி பெற்றோர் எதிர்பார்ப்பிற்கு ஏற்ப மருத்துவத்துறையை தெரிவு செய்துள்ளார். தற்போது மருத்துவக் கல்வி நுழைவுக்காக புதுமுக தேர்வு பரீட்சைக்கு தன்னை தயார்படுத்திக் கொண்டிருக்கிறார். இவர் தம் அன்பு மகள் விதுஷா பிரான்ஸ் நாட்டுக் கல்வித்திட்டத்தில் பயின்று வருகின்றார். இவரும் உயர்தர விஞ்ஞான பிரிவில் பாடங்களில் கவனம் செலுத்தி ஆர்வத்துடன் பயின்று வருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் வெளிநாடு சென்றபோதும் இவரின் நாட்டுப்பற்றும், இனப்பற்றும், கிராமப்பற்றும் விட்டுவிலகவில்லை. தான் அகதியாக இருந்து கிடைக்கும் வருமானத்தில் ஒரு பகுதியை தமது இனம், தமது கிராமம் பயன்பெறுவதற்காக செலவிட்டார். மேலும் ஒரு பகுதியை கஷ்டத்தில் வாழ்ந்துவரும் தன் சகோதரங்களின் நலனுக்காக உதவி வந்தார். இவரைப்போன்று அகதிகளாக பிரான்ஸ் வாழும் மாதகல் வாசிகளை ஒன்று சேர்த்து பிரான்ஸ் மாதகல் அபிவிருத்தி சங்கத்தை ஆரம்பித்தார். அங்குள்ள மாதகல் இளையோரும் மாதகல் மண்மேல் பற்றுக்கொண்டு தமக்கு தலைவனாக திரு. பொன்னுத்துரை அவர்களைத் தெரிவு செய்தனர். இச்சங்கம் பின்னர் பிரான்ஸ் மாதகல் நலன்புரிச்சங்கம் என மீளப்பதிவு செய்யப்பட்டது. இத்தோடு நில்லாது சுவிஸ் நாட்டிற்குச் சென்று அங்கும் சுவிஸ் மாதகல் நலன்புரிச்சங்கத்தை நிறுவ ஊக்குவித்தார். மேலும் கனடா சென்று கனடா மாதகல் நலன்புரிச்சங்கத்துடன் மாதகல் கிராமத்தின் நலன்கருதி பல்வேறு செயற்றிட்டங்கள் பற்றி கலந்துரையாடி அவர்களையும் ஊக்கப்படுத்தினார். லண்டன் சென்று மாதகல் நலன்புரிச் சங்கத்தவர்களுடன் அடிக்கடி தொடர்புகொண்டு உற்சாகப்படுத்தியும் வந்தார். இவரின் இடையறாத முயற்சியால், சேவையால் கிராமம் பயன்பெற்றது. 2004ம் அண்டு ஏற்பட்ட சுனாமியால் ஆசியாக்கண்டத்தில் பல்லாயிரக் கணக்கானோர் காவுகொள்ளப்பட்டனர். மாதகலும் அக்கடல் கோளால் பாதிக்கப்பட்டது. மாதகலைச் சேர்ந்தவர்கள் வடமராட்சி, முல்லைத்தீவுப் பகுதிகளில் கடல் பெருக்கில் சிக்கித் தமது உயிர்களை இழந்தனர். மாதகல் கடலில் நிறுத்தப்பட்டிருந்த மீன்பிடி வளங்கள், படகுகள் மற்றும் வலைகள் சேதமடைந்தன. இதனை கேள்வியுற்ற பொன்னுத்துரை மாதகலிலிருந்து கோரிக்கை விடப்படாமலே மீனவர் துயர் துடைக்க ரூபா 253000 அனுப்ப முன்னின்று உழைத்தார். தனது உடன்பிறவா சகோதரரின் துயரில் தானும் பங்கு கொண்டமை மறக்க முடியாதது எனலாம். மாதகல் சிறார்களின் கல்வி வளர்ச்சியில் அக்கறை கொண்டு தான் தலைமை வகிக்கும் பிரான்ஸ் மாதகல் நலன்புரிச்சங்கத்தை பாலர் கல்வியில் அக்கறை மேம்படுத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகமாக பாலர் பள்ளிகளில் ஆசிரியர்களுக்கு உதவு தொகை வழங்க வழி நடத்தி அவர்களின் சம்மதத்துடன் வருடாவருடம் பணம் அனுப்பி வரப்படுகிறது. அத்தோடு மாணவர் ஆங்கில கல்வியறிவினை மேம்படுத்த மேலதிக ஆங்கில வகுப்பு நடாத்த பணம் அனுப்பப்படுகிறது. மாதகல் நுணசை வித்தியாலய மாலை நேர வகுப்புகளுக்கும் வழங்கப்படுகிறது. மாதகல் பாடசாலை களில் கற்று தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் ஒவ்வொரு மாணவர்களுக்கும் வருடாவருடம் ரூபா 10000 வழங்க பண உதவி அனுப்ப முன்னின்று பாடுபட்டவர். இவ்வாறு தனக்காகவும், பிறருக்காகவும் வாழ்ந்த பொன்னுத்துரை மறக்க முடியாத நற்பண்புகளைக் கொண்டவர். இவரின் இறுதி வாழ்வு சுவாசப்பையில் ஏற்பட்ட கோளாறினால் நீண்ட காலம் மண்ணில் நிலைக்க முடியாமல் போனது. இவரின் மரணச்செய்தி 18. 07. 2013 கிராம மக்களின் காதுகளுக்கு எட்டியது. அவர் மறைந்த செய்தி ஊர் மக்களை துன்பக்கடலில் ஆழ்த்தியது. இத்தகைய பண்பாளரின் ஆத்மசாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின் றோம்.

ஓம் சாந்தி! ஓம்சாந்தி!! ஓம் சாந்தி!!!

**மாவீரன் நெப்போலியன்**

என்னிடம் இருந்து எல்லாவற்றையும் எடுத்துக் கொள்ளுங்கள்.... நான் வெற்றியடைய என் நம்பிக்கை மட்டுமே எனக்குப் போதும்!

**பெர்னாட்ஷா**

நல்லவராய் இருப்பது நல்லதுதான்
ஆனால் நல்லது கெட்டது தெரியாத நல்லவராய் இருப்பது ஆபத்தானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு மகளின் புலம்பல்

என் உயிர்த்தந்தையே!
என் உயிர்த்தந்தையே நின்றது உங்கள் சுவாசமா?
இல்லை இல்லை
என் சுவாசமா? நம்பமுடியவில்லையே! நம்பமுடியவில்லையே! ஆனாலும் நம்பித்தான் ஆகவேண்டும். என்னை விட்டு எங்கே சென்றீர்கள் அப்பா? என் வானத்து சூரியன் எங்கே மறைந்தது? எங்கே பார்த்தாலும் உங்கள் பொன்முகம். எங்கே கேட்டாலும் விதுசா, விதுசா என்ற உங்கள் கம்பீரக்குரல் ஏமாந்து போய்விட்டேன் அப்பா. நான் உங்கள் செல்லமகள் என்று ஆசைப்பட்டதெல்லாம் வாங்கித்தந்தீர்கள். நீங்கள் நினைத்த இலட்சியங்களை நான் நிறைவேற்ற முன்பே நீங்கள் எங்கே சென்றுவிட்டீர்கள்? அப்பா. அப்பா, அப்பா, என்று நான் அழும் சத்தம் உங்களுக்கு கேட்கவில்லையா? நான் பாடசாலையை விட்டு வீடு வரும் போது விதுசா இன்று என்ன படித்தாய்? பரீட்சை கவனமாக செய்தாயா? தெரியாத பாடங்களை அண்ணாமாரிடம் கேட்டுப்படி என்று சொல்லுவீங்கள். இப்போது எல்லாமே மாறிப்போய்விட்டது. வீடே வெறுமையாக உள்ளது. எங்கே நான் தேடுவேன் அப்பா! என் இதயம் வலிக்கிறது. நீங்கள் இல்லாதது நிஜமா? அப்பா? ஏன் அப்பா எனக்கு மட்டும் இப்படி ஒரு தண்டனை. இதற்காகவா என்னை நீங்கள் செல்லமாக வளர்த்தீர்கள். எனக்கு எல்லாமே வெறுமையாக இருக்கிறது. அப்பா என்று இனி நான் யாரை கூப்பிடுவது. நீங்கள் இல்லாமல் உங்கள் இலட்சியங்களை நான் எப்படி அப்பா நிறைவேற்றுவேன். நான் சோர்ந்து போய் விடுவேனா? இப்படி எனக்குள் ஆயிரம் ஆயிரம் கேள்விகள் எத்தனை பேர் என்னைச் சுற்றி நாங்கள் இருக்கிறோம் என எனக்கு ஆறுதல் தந்தாலும் என் அப்பாவை போல் எனக்கு இருக்குமா? உங்கள் அன்பு மொழி எனக்கு வேணும். உங்கள் அன்பு முத்தம் எனக்கு வேணும். அப்பா என்னுடன் என்றும் நீங்கள் வாழவேணும் நான் உங்கள் இலட்சியங்களை நிறைவேற்ற வேண்டும். உங்களைப் பற்றி நான் எழுத்தில் அடக்கமுடியுமா? காற்றுக்கு வேலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போடமுடியுமா? என் அப்பாவுக்கும் அப்படித்தான். அப்பா வைத்தியசாலையில் என்னோடு இறுதியாக இருந்த நேரம் உங்கள் பார்வைக்கு எனக்கு இப்போது அர்த்தம் கிடைத்துவிட்டது. அப்பா உங்கள் இலட்சியங்களை நான் உறுதியாக நிறைவேற்றுவேன். ஏனெனில் நீங்கள் என்றும் என்னுடன் எனக்குள்ளே வாழ்கின்றீர்கள்.

**என்றும் கண்ணீருடன்**

**பாசமுள்ள மகள் விதுசா**

# பாரியார் புலம்பல்

என் குடும்ப விளக்கே நீங்கள் அணைந்துவிட்டீர்களா? இல்லை இல்லை என்னுள்ளே மறைந்துவிட்டீர்கள்? இதைத்தான் அடிக்கடி சொல்லுவீர்களா? இரு உடல் ஓர் உயிர் என்று என்னையும் பிள்ளைகளையும் தவிக்கவிட்டு விட்டு நிம்மதியாக துயில் கொள்கிறீர்களா? நம்பமுடியவில்லையே நீங்கள் இன்று எங்களுடன் இல்லை என்பதை இது கனவா இல்லை நனவா என்று புலம் புகின்றேன். ஏனப்பா இப்படி ஒரு பிரிவை எனக்கு கொடுத்தீர்கள். நான் என்ன தவறு செய்து என்னை இப்படித் தண்டித்தீர்கள். நீங்கள் தான் என் உலகம் என்று வாழ்ந்தேனே. எனது சிறுவயதிலே என் தாயை இழந்து சகோதரர்களின் பராமரிப்பில் வாழ்ந்தேன். பின்பு உங்கள் கரம்பிடித்து என் இனிய இல்லற வாழ்க்கையை 25 வருடம் சொர்க்க பூமியாக இனிதே வாழ்க்கை தந்தாயே என் தலைவா. ஏனப்பா என்னை நடுக்கடலில் தத்தளிக்க விட்டீர்கள் நான் எந்தப் பக்கம் போவேன்? உங்களோடு நான் வாழ்ந்த காலத்திலே ஆழக்கடலிலே மூழ்கி முத்தெடுத்ததை போல பெற்றெடுத்தேனே மூன்று முத்துக்கள். முத்துக்கள் மூன்றும் உங்கள் பணிதொடர முன்பே உங்கள் பணி முடிந்தது என்று எங்களைப் புலம்ப விட்டு சென்றுவிட்டீர்களே.

என் தலைவா உங்கள் செல்வங்களோடு என் வாழ்க்கை எப்படி அப்பா? நீங்கள் இல்லாமல் மிகுதி வாழ்க்கையை துடுப்பு இல்லாத ஓடம் போல தவிக்கிறேன். உங்கள் உருவம் மறைந்தாலும் உங்கள் உயிர் என்னுள்ளே இரண்டறக் கலந்து எனக்கு வழிகாட்டியாக இருக்கும். கடந்த ஒரு வருடமாக நோய் வாய்ப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் வேலைக்கு போய் வரும் பொழுதெல்லாம் எனக்காக காத்திருப்பீரகளே. இனியாரப்பா எனக்காக காத்திருப்பது. நீங்கள் அடிக்கடி சொல்லுவீங்களே. நான் இல்லாவிட்டால் எப்படி இருப்பாய் என்று இப்ப பாரப்பா நான் எப்படித் தவிக்கின்றேன் என்று. என் கனவிலே கூட நான் நினைக்கவில்லை. எனக்கு இப்படியோர் இடிவிழும் என்று என் குலதெய்வமான வைரவரும் என்னை கைவிட்டு விட்டார்.

உங்கள் இதயத்தில் என்னை ஒரு குழந்தையாக பார்த்தீரகளே. ஏன் என்னை தனியாக தவிக்க விட்டு சென்றீரகள் எனக்கு எத்தனைபேர் ஆறுதல் சொன்னாலும் உங்களைப் போல் வருமா உங்களை என் வாழ்க்கைத்துணைவராக அடைய நான் என்ன புண்ணியம் செய்தேனோ தெரியவில்லை.

மீண்டும் ஒரு ஜென்மம் எனக்கு இருந்தால் அந்த ஜென்மத்திலும் நீங்கள் என் கணவராக வேண்டும்.
பிறந்த வீட்டில் பெற்றோரை இழக்கக் கூடாது
புகுந்த வீட்டில் புருஷனை இழக்கக் கூடாது
என் விதியை பார்த்தீரகளா நான் எல்லோரையும் இழந்து விட்ட பாவி நீங்கள் தான் அப்பா என் உயிரோடு கலந்து உணர்வோடு வாழ வேண்டும்.

**என்றும் கண்ணீருடன்**
**உங்கள் அன்பு மனைவி**

# மூத்த மகன் புலம்பல்

உன் உயிர் கொடுத்த
என் உயிர் தந்தையே......
அப்பா நான் உங்கள் முதல் செல்ல மகன் விகடர் கேட்கிறேன். ஏனப்பா என்னை விட்டு இவ்வளவு சீக்கிரமாக உங்கள் வாழ்க்கையை முடித்துக்கொண்டீர்கள். என்னால் உங்கள் இழப்பபை தாங்கமுடியவில்லையே? இது நிஜமா அல்லது கனவா அப்பா நீங்க்ள் எவ்வளவு கஸ்ரப்பட்டு என்னை வளர்த்தீரகள். நீங்கள் குளிரில் நடுங்கி மழையில் நனைந்து வெயிலில் காய்ந்து என்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுமையப்பா எவ்வளவு சுமையோடு வாழ்க்கையை நீங்கள் சுமந்தீர்கள். வேதனையையும் சோதனையும் சவாலாகவே ஏற்றுக்கொண்டீர்கள். நீங்கள் உங்களுக்காக வாழ்ந்த வாழ்க்கையை விட பிறருக்காக வாழ்ந்த வாழ்க்கை தானே நான் கண்ட நிஜம். உங்களை நான் என் அப்பாவாக மட்டும் பார்க்கவில்லையே ஒரு நல்ல நண்பனாகவும் நல்ல வழிகாட்டியாகவும் என்னுடைய ஒவ்வொரு சாதனைகளுக்கும் நீங்கள் தானே உதாரணம். உங்கள் வாழ்க்கையில் நடந்த சம்பவங்களை தானே நான் என் வாழ்க்கையில் பாடமாக எடுத்துக்கொண்டேன். நீங்கள் அடிக்கடி சொல்லுவீாகளே நாடு உனக்கு என்ன செய்தது என்று பார்க்க வேண்டாம். நீ நாட்டுக்கு என்ன செய்தாய் என்று பார். அப்பா எனக்கு எவ்வளவு வீரதீர கதைகளை சொல்லி நான் சோரும் போதெல்லாம் தட்டிக்கொடுத்து என்னை உற்சாகம் கொடுப்பீாகளே. இனி யார் அப்பா உங்கள் இடத்தில் இருந்து என்னை பார்ப்பதற்கு. அப்பா எனக்கு எவ்வளவு வாழ்க்கைத் தத்துவங்களை சொல்லித்தந்தீர்கள். நாங்கள் அப்பா மகன் போலவா இருந்தோம். நல்ல நண்பர்கள் போல அல்லவா இருந்தோம். உங்களோடு வாழ்ந்த இனிய வசந்த காலத்தை இனி நான் எங்கே தேடுவேன்? அப்பா உங்களுக்கு தெரியுமா? நாங்கள் அரசியல் கூட கதைக்கும் போது எங்களுக்குள் கருத்துவேறுபாடு வரும் போதெல்லாம் உங்கள் திறமையால் என்னை தோற்கடிப்பீர்கள். ஏனப்பா நீங்கள் அடிக்கடி சொல்லுவீாகளே "விக்டர் நான் மரணத்துக்கு பயப்படாதவன்" என்று. ஏனெனில் நீங்கள் ஏழுமுறை மரணத்தின் வாசல் கதவை திறந்து பார்த்து வந்தேன் என்று எட்டாவது முறை பீஸ்மர் துயில் கொள்வதைப்போல மீளாத் துயில் கொண்டீர்களா? அப்பா அன்று ஒரு நாள் நீங்கள் இரண்டு மணிநேரம் எனக்காக குளிரில் நடுங்கி கொண்டு இருந்த வேளையில் நான் மட்டும் நல்ல சூட்டில் பாடசாலையில் படித்துக்கொண்டு இருந்தேன். எதை அப்பா மறப்பது நீங்கள் என்னை மறந்து விட்டு போய்விட்டீர்கள். என்னை மட்டுமா அன்பு அம்மா, என் பாசத்தம்பி, என் அன்புத்தங்கை, அநாதையாக அப்பா இல்லாமல் தவிக்கிறார்கள். இவர்களின் உள்ளக்குமுறலை நான் வெறும் வார்த்தையால் எழுத முடியுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பா நீங்கள் தெய்வமாக இருந்து எங்களது கஸ்ரத்திலும் சந்தோஷத்திலும் துணைபுரிய வேண்டும். நீங்கள் கொண்ட இலட்சியத்தை நான் நிறைவேற்றுவேன். அப்பா இன்னும் சில நாட்களில் உங்கள் கஸ்ரங்களை போக்கி நான் என் உள்ளங்கைகளில் தாங்கி சந்தோஷம் கொடுக்கும் வேளையில் நீங்கள் என்னை விட்டு போனீர்களா? என் இதயத்தில் என்றுமே நீங்கள் தான் இருப்பீர்கள். என் உயிரோடும் உணர்வோடும் நினைவோடும் என் அன்பு அப்பா சங்கமிக்க அப்பாவின் இலட்சியங்களோடு நான் அப்பாவாக வாழ்வேன்.

**என்றும் கண்ணீருடன்**
**பாசமுள்ள மகன் விக்டர்**

# இளைய மகனின் புலம்பல்

என் உயிர்த் தந்தையே

பாசமுள்ள அப்பாவே நீங்கள் தானே எனக்கு எல்லாவற்றையும் கற்று தந்தீர்கள். எனது முதல் காலடி எனது முதல் மழலை வார்த்தைகள் உங்களது முத்தப்பரிசங்கள் என்று நான் சொல்லிக்கொண்டே இருக்கலாம் நீங்கள் என்னோடு இருந்த காலங்களை நான் செய்தித்தாளில் எழுதி விடலாமா? நான் படிக்கும் காலங்களில் என் தோளோடு தோள் நின்று தட்டிக்கொடுத்து மருத்துவக்கல்லூரி முதல் வாசல் படியில் ஏற்றிவிட்டீர்கள். மிகுதிப்படியை நான் எப்படி அப்பா உங்கள் உதவி இல்லாமல் படித்து முடிப்பேன் அப்பா. எனக்கு எல்லாமே வெற்றிடமாக உள்ளது. என் அப்பாவின் இடத்தை இனி யார்தான் நிரப்புவார்கள். என்னால் உங்கள் இலட்சியத்தை நிறைவேற்றமுடியுமா? நீங்கள் தானே அடிக்கடி சொல்லுவீர்கள் வினோத் உன்னால் முடியும் முடியுமென்று. இப்போ நான் கோழையாகி விடுவேனா? இல்லையப்பா இல்லை உங்கள் இலட்சியத்தில் இருந்து நான் ஒரு நாளும் பின்வாங்கமாட்டேன். ஏனெனில் எனக்கு நீங்கள் ஒரு அப்பாவாக மட்டுமன்றி நண்பனாகவும் ஒரு சிறந்த நல் வழிகாட்டியாகவும் இருந்தீர்கள். அப்பா நாளுக்கு நாள் உங்களது சிந்தனைகள் செயல்கள் தொடர்ந்து கொண்டே போனது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களைப் பாரத்து நான் ஆச்சரியப்பட்டேன். எனக்கும் உங்களைப் போல் இருக்க வேண்டும். என்று ஆர்வமாகவும் ஆசையாகவும் என்றும் பற்பல எண்ணங்கள் நிறைய உள்ளன. ஆனாலும் அப்பா இன்னும் நிறைய நல்ல விசயங்களை எனக்கு சொல்லித்தர நீங்கள் இல்லையே உண்மைதானா அப்பா இல்லையப்பா உங்கள் உருவம் தான் அப்பா என்னோடு இல்லை உங்கள் இலட்சியங்களை என் உயிரோடு இரண்டறக்கலந்து விட்டீர்கள். அப்பா இறுதி நேரத்திலும் வைத்தியசாலையிலும் உங்களோடு நாங்களும் எங்களோடு நீங்களும் இருந்த வேளையிலும் நீங்கள் தனியாக இருக்க வில்லையப்பா மாதகல் கிராமமே கூடி நின்றார்கள். அந்த வினாடியே புரிந்துவிட்டேன் நீங்கள் ஒரு சாதாரண மனிதர் அல்ல. சாதிக்க பிறந்தவர் என்று எல்லோரினதும் அன்பையும் பாசத்தையும் பெற்றுவிட்டீர்களே. எனக்கு மட்டும் நீங்கள் அப்பாவாக இல்லையே மாதகல் கிராம மக்களுக்கே நீங்கள் தலைவராக விட்டீர்களே. அப்பா என் நிலைகண்டு நான் கலங்கவில்லை ஊர் மக்களுக்கு அவர்கள் நிலைகண்டு நீதி தராமலே போய்விட்டீர்களே. எல்லோரையும் தோற்கடித்து நீங்கள் வெற்றிமாலை சூடினீர்களே. அப்பா நீதிக்கே துணிந்து நின்று நினைத்ததெல்லாம் ஜெயித்து வந்தீர்களே. வேதனையை என்னோடு விட்டு விட்டு போனீர்களே. அப்பா நெஞ்சு வலிக்குது. என்னோடு தானே அப்பா நீங்கள் வாழ்கின்றீர்கள். உங்கள் இலட்சியங்களோடு நான் வாழ்கின்றேன்.

**என்றும் கண்ணீருடன்**

**பாசமுள்ள மகன் வினோத்**

# பேரப்பிள்ளைகள் புலம்பல்

எங்கள் அப்பப்பா

பல இதயங்களை தொட்ட ஒருவர் எங்கள் அப்பப்பா
எல்லோருக்கும் உதவி செய்ய விரும்பும் ஒருவர் எங்கள் அப்பப்பா
எல்லோரையும் சிரிக்க வைக்கும் ஒருவர் எங்கள் அப்பப்பா
மற்றவர்களுக்காக நேரம் செலவிடும் ஒருவர் எங்கள் அப்பப்பா
எல்லோரையும் நேசிப்பவர் எங்கள் அப்பப்பா

**பேரப்பிள்ளைகள்**

**அபிரா, ஜமிரா, சஞ்சீரா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் உயிர்த் தந்தையே!

இந்த உலகத்திலேயே நான்தான் அதிஷ்டமானவள்
இப்படி ஒரு அப்பா கிடைத்ததிற்கு
ஒவ்வொருவர்களுக்கும் அவர்களோடு அப்பா பெரிது
எனக்கு நீங்கள் பெரிதாகவும் வித்தியாசமாகவும் தெரிந்தீர்கள்
ஏனென்றால் நீங்கள் எனக்கு அப்பாவாக மட்டும் இருந்ததில்லை
என் உயிர் நண்பனாகவும் இருந்தீர்கள்
நீங்கள் சாதாரணமானவர் அல்ல. என் உயிர் படைத்த தந்தை உங்கள் இலட்சியங்களை என்னொடு விட்டுவிட்டுச் சென்றுவிட்டீர்கள் நான் என் அப்பாவின் இலட்சியங்களை நிறைவேற்றுவேன் நீங்கள் என்னை விட்டு தூர சென்றாலும் உங்களை நான் என் சுவாச மூச்சாக சுவாசிப்பேன் தந்தையே!
எங்கேயும் நீங்கள் என் வழிகாட்டியாக இருந்தீர்கள்.
நீங்கள் இப்போ எங்கே போய்விட்டீர்கள்? எங்கே சென்றாலும் உங்கள் உயிர் என் இதயத்தில் உள்ளது. உங்கள் பிரிவை நினைத்துப் பார்க்க முடியாததொன்று. ஆனால் வாழ்க்கையில் இந்த நிகழ்வுகளும் நடைபெற்றே ஆகும் என்று சொல்லி வளர்த்தீர்கள் அப்பா!
ஆனாலும் தாங்கமுடியவில்லையே
எனது எல்லா சம்பவங்களையும் உங்களோடு கதைக்கும்போது
நீங்கள் என்னை ஒரே பார்வையில்தான் பார்ப்பீர்கள்
ஏனென்றால் உங்களுக்கு இரக்கமான மனசு உங்களை என்றும் நேசிக்கிறேன் அப்பா! உங்களைப் போல நல்லவர்களுக்கு இறைவன் மடியில் நிச்சயம் இடமுண்டு.
உங்கள் ஆத்மா சாந்தி இடைய இறைவனை வேண்டுகிறேன். உங்கள் ஆத்மா என்னை விட்டுப் பிரிந்தாலும் உங்கள் நினைவுகள் என் உயிருடன் சங்கமிக்கும்.
அடுத்த ஜென்மத்தில் சந்திப்போம் அப்பா

**என்றைக்கும் உங்கள் நினைவகளோடு**
**உங்கள் செல்ல மகள் விதுசா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உற்றார் உறவினர் புலம்பல்

மாதகல் மண்ணுக்காய் சேவைசெய்த எம் மாமனிதன்
சாய்ந்த துயர் எம்மக்களை இங்கு வாட்டுதையா.

அலை கடல் நீர் தாண்டிடினும் எளிமை மிகு
தோற்றமும், ஏறுபோல் உம் நடையும்
பண்பான நடத்தைகளும் பாசமுள்ள வார்த்தைகளும்
பசுமரத்தாணிபோல் எம் நெஞ்சில் பதிந்ததையா

தமர் பிறர் உமக்கில்லை தாழ்வுயர்வும் உமக்கில்லை
சாதிகள் உமக்கில்லை சமயங்களும் உமக்கில்லை
அன்பும் கொள்கையுந்தான் உம் ஆத்மார்த்த உயிர் மூச்சு

நோயுற்ற உம் செய்திகேட்டு நாம் துடிதுடித்தோம்
பிணிநீங்கிப் பிறகு நீர் மீண்டெழக் காத்திருந்தோம்
வந்தது ஓர் பேரிடி
அது உம் மறைவென்ற கொடுஞ்செய்தி

நல்ல மனிதனைப் பண்பாளனை சகோதரனை நாம்
இழந்திங்கு தவிக்கின்றோம்.
உயிரோடு நீர் ஒரு கால் எம்மூர் வருவீரெனப்
பார்த்திருந்தோம்

உம்முயிர் நீங்கிய செய்தி கேட்டு ஊனுருகத்
துடிக்கின்றோம்
என்றாலும் தேறுகின்றோம் பிறந்தவர் இறப்பது
இப்பூவுலகின் நியதியென
ஆத்ம சாந்திக்காய் அனுதினமும் ஆண்டவனைத்
தொழுகின்றோம்.

**உற்றார் உறவினர்**
மாதகல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் பொன்னுத்துரை
## - ஒரு நினைவு குறிப்பு

இன்று திரு. பொன்னுத்துரை அமரராகி விட்டார். அவரைப் பற்றி எண்ணிப்பார்த்து சில வார்த்தை எழுதுவதற்கு அவர் வாழ்விலும் அவர் தம்மை இணைத்துக்கொண்ட முறையிலும் குறிப்பிடத்தக்க சில விடயங்கள் உள்ளன.

யாழ். குடாநாட்டில், மாதகல் கிராமத்தில் பிறந்து வளர்ந்து இளைஞராக இங்கு உலாவிய காலத்திலேயே அவரின் சிந்தனைகள் சாதாரணமாகக் காணப்படாத ஒரு உயரிய மட்டத்தில் இருந்ததை அவதானித்திருக்கின்றோம். பின்னர் புலம் பெயர்ந்து பிரான்ஸ்தேசத்தில் வாழ வேண்டிய நிலமைகள் ஏற்பட்ட காலகட்டத்திலும் கூட அவருடைய சிந்தனைகளும், செயல்முறைகளும் அதே இலட்சிய நிலைப்பாட்டிலேயே தொடர்ந்து நின்றதை அறிந்தோம். பொன்னும் பொருளும் ஈட்டி தன்னலம் பேணி வாழும் வாழ்க்கையில் மூழ்கிவிடாமல் இவர் தம் பேச்சிலும், மூச்சிலும் உலகப்பொது நீதியாம் பொதுவுடமை சார்ந்த நிலைப்பாட்டிலேயே நிலைத்து நின்றார். தன் இறுதி மூச்சுவரை தாம் பிறந்த மண்ணின் நினைப்போடு வாழ்ந்திருந்தார். தன் சுயநலத்தை விட தான் விட்டுப்பிரிந்து வந்த மக்களின் சுகம் பற்றியே கவலை கொண்டிருந்தார். குரல் இல்லாதவர்களின் குரலாக உரிமை மறுக்கப்பட்டவர்களின் தோழனாக நிற்பதிலேயே திருப்தி கொண்டிருந்தார். என்றோ ஒருநாள் இந்த மண்ணில் தான் பிறந்த மாதகலில் வந்து வாழ்ந்தே தீரவேண்டும் என்று அவருக்குள் இருந்துவந்த ஆசையையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீறி காலம் அவரை தன்னுள் ஈர்த்துக்கொண்டு விட்டது.

பேரிடிபோல் திடீரென்று வந்து அவரைத் தட்டிப் பறித்து சென்றுவிட்ட நோயை நோவதா, விதியை நோவதா என்று கலங்கி நிற்கும் எமது சகோதரியைத் தேற்றும் வழி தெரியாமலும் திகைப்போடு இருக்கும் பிள்ளைகளுக்கு துணிவு சொல்லும் ஆற்றல் இல்லாமலும் இங்கே உறவினர்கள் கலங்கி நிற்கின்றனர். தங்கள் நலன்களின் நினைப்பில் வாழ்நதிருந்த ஒருவரை பிரிந்தோமே என்று ஊர் மக்கள் துக்கமடைந்தனர். இனமத பேதமின்றி பல திசைகளிலுமிருந்து துயர்பகிர வந்துகூடினர்.

வாழ்வு அநித்தியமானது. வாக்குகளும் சிந்தனைகளுமே சத்தியமானவை. பலரின் எண்ணங்களில் பொதிந்து போயிருக்கக்கூடிய ஆளுமை கொண்ட பொன்னுத்துரை என்னும் பெயர் அவரது அபிமானிகளின் மனதில் நீண்ட நாட்கள் நிலைத்திருக்கும்.

**Dr. சண்முகதாஸ்**
**மாதகல்.**

ரலப்கின்
உழைக்காமல் வாழ்பவன் தன்னை மனிதன் என்று சொல்லிக்கொள்ள அருகதை அற்றவன்

நெப்போலியன்
நாளை நாளை என ஒரு காரியத்தைத் தள்ளிப்போடுவது வெற்றியை தள்ளிவைப்பது போலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய் மண் மறவாத தனயன்

மாதகல் கடல்வளம், நிலவளம், நீர்வளம் அனைத்தும் ஒருங்கமைந்த அழகிய கிராமம். இலங்கைப்படத்தில் எந்த சிறு பிள்ளையானாலும் இலகுவாக அடையாளம் காணக்கூடிய ஒரு முனைப்பகுதி. மாதகலுக்குள் வரும்போதே பசுமையான வயல்வெளியையும் அதன் நடுவே வீற்றிருக்கும் பாணாவெட்டி அம்மன் கோவிலையும் கண்டு மனம் பறிகொடுக்காதவர்கள் இருக்க முடியாது.

இங்குதான் அமரர் பொன்னுத்துரை அண்ணன் பிறந்ததும், வளர்ந்ததும். சிறுவயதில் இருந்தே சமூகநேயமும், மண்பற்றும் மிக்க அவரை நான் அறிந்து பழகியதுஎல்லாம் மண் மீது பற்றுக்கொண்டு எங்கள் மக்களுக்காக போராடிக்கொண்டிருந்த போராளியாக இருந்தபோதுதான்.

அரசியல் தெளிவு, எம்மக்களின் உரிமைகளில் மிகுந்த ஆர்வம் அதற்காக போராடும் மனப்பாங்கு இவற்றோடு கூடிய சிறந்த போராளிகளில் ஒருவர். மிகக்கடினமான காலத்தேயும் மண்ணில் நின்று மக்களுக்காக போராடிய மறவர். பெரிய அரசியல் போராட்டங்களை வழிநடத்தக்கூடிய அவரின் அர்ப்பணிப்பு வாழ்க்கை. இடைக்கால சூழ்நிலைகளால் இங்கு இல்லாமல் போனமை எமது துர்அதிஸ்டம்.

அவர் தனது பிற்கால வாழ்வை பிரான்சில் வாழ்ந்தாலும், அவரது மனம் மாதகலுடனேயே இருந்தது. பிரான்ஸ்மாதகல் நலன்புரிச்சங்கம் மூலம் அவரும் திரு. வீ. குகரவீந்திரநாதன் அவர்களும் எனையவர்களுடன் இணைந்து ஆற்றிய, ஆற்றும் பணி மகத்தானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதகல் கல்வி அபிவிருத்தி சங்கத்தின் உருவாக்கம் வழிநடத்தல் மற்றும் செயற்பாடுகளுக்கு மிகமிக பெறுமதியான பங்களிப்பை அவர் வழங்கியுள்ளார். ஒரு கிராமத்தின் கல்வி அபிவிருத்தி ஒன்றே அக்கிராமத்தின் எல்லா துறை முன்னேற்றங்களுக்கும் வழிவகுக்கும் என்று கருதி செயற்பட்டார்.

எமது மண்ணையும் மக்களையும் மனமார நேசித்த அவர் இறுதி காலங்களில் தான் தவழ்ந்து விளையாடிய எங்கள் ஊருக்கு வர விரும்பியதாக அறிந்தேன். ஆனாலும் அவரின் எண்ணம் செயலாகும் முன்னே ஆண்டவன் அவரை தன்னுடன் அழைத்துக்கொண்டார்.

மிகவும் அருமையான மனித நேயம் மிக்க ஒரு மாமனிதன் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது மனைவி, பிள்ளைகள் மற்றும் உறவினர் அனைவருக்கும் என் குடும்பத்தின் சார்பாகவும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அவரின் ஆன்மா நுணசை முருகன் அடியில் சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*

**க. இளங்கோஞானியார்**
**மருத்துவ உத்தியோகத்தர்**
**யாழ். போதனா வைத்தியசாலை.**

உரிமைகளை மட்டும் எண்ணிய சமுதாயம் மேன்மை அடைவதில்லை. கடமைகளை கருதியவர்களே மேன்மை அடைகிறார்கள். கடமையைச் செய்தால் உரிமைகள் தாமாகவே வந்தடையும்

**- மகாத்மாகாந்தி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்க முடியாத இனிய நண்பன்

மனித வாழ்வில் பிறப்பும் இறப்பும் இயற்கையானது. மாண்டவர்கள் மீண்டொருக்கால் உயிர்ப்பதில்லை. மாநிலத்தில் இவ்வுண்மை உணர்ந்தவர்கள் மாண்டவருக்காய் அழுவதில் பயனுமில்லை. மரணமிது எவ்வுயிர்க்கும் நிச்சயமாம் என்கிற இத்தேற்றங்களிலிருந்து மனதை ஆற்றலாம் என்றால் இயலவில்லை. என் செய்வது

நண்பர்கள் மத்தியில் 'பொன்னுக்கிளி" எனும் பெயர் பிரசித்தம். வாழ்வின் முழுமையை தான் சார்ந்த சமூகத்திற்காக அர்ப்பணிப்புடன் ஈந்தவன் என்றால் அது மிகையாகாது என்பதுதான் அறுதி உண்மை. பல்கலைக்கழகத்தில் நான் படித்த காலப் பகுதியில் ஊருக்கு நான் வரும்போது தேடி பற்று பழகும் இனிய நண்பன். அவன் சிந்தனை முழுவதும் கைவிடப்பட்ட மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த வேண்டிய விடயங்களைப் பற்றியதாகவே இருக்கும். தீர்க்க தரிசனத்துடன் விடயங்களை மனதளவில் துணிவுடன் செய்து நேரிடையாக வெளிப்படுத்தும் விதம்தான் என்னை அவன்பால் ஈர்த்தது.

காலத்தின் கோலங்கள் பல்வேறு விதமாக அழுத்தியபோது வெளிநாடு செல்லவேண்டிய கட்டாய நிலைக்கு உள்ளாக்கப்பட்டான். அங்கு சென்றும் கூட அவன் சார்ந்த மக்களுக்கான அவனது செயற்பாடுகள் மறக்க முடியாத சரித்திரங்கள். இவன் மறைந்ததை ஏற்றுக்கொள்ள மனம் மறுதலிக்கின்றது.

எனினும் நண்பன் பொன்னுத்துரையின் மறைவில் துயரடையும் மனைவி, பிள்ளைகள், உறவினர், சுற்றத்தாருக்கு ஈழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கும் வேளையில் அவனது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

**அன்பரங்கம்**
**மாதகல்.**

**சு. கிருஷ்ணகுமார்**
**வலயக்கல்விப்பணிப்பாளர்**
**தென்மராட்சி - சாவகச்சேரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்னா! நாம் உன்னை மறவோம்!!

நீ எம்மோடு ஒன்றிக்கலந்த ஆத்மா உனது ஜனனத்தில் இருந்து இன்று 18.07.2013 அன்று உனது சுயவிருப்பமின்றி காலனால் உன் உயிர் பறித்து எடுத்து கொண்டு செல்லும் வரை எமது உள்ளங்களில் நீ பதியவிட்டு சென்றுள்ள நினைவலைகள் "நாம் உன்னை மறவோம்" என சத்தியம் செய்கின்றது. மாதகல் பதியில் பொருதானை குறிச்சியில் நீ 17.04.1954 அன்று விஸ்வலிங்கம் தெய்வானை தம்பதிகளுக்கு கடைசி மகனாக அவதரித்தாய் உனது மூன்று மூத்த அண்ணர்களின் அயராது உழைப்பாலும் உன் அருமை தாயாரின் எல்லையில்லா பாசப்பிணைப்பாலும் உன் தந்தை இல்லாத, வெற்றிடத்தை உணராது வளர்ந்து ஆளானாய். உன் வளர்ச்சியில் உன் குடும்பத்துடன் பக்கபலமாக ஊரே ஒத்துழைத்து நின்றது. அதன் நன்றிக்கடனை மறவாது நீ எம் ஊரின் வளர்ச்சிக்கு முன் நின்றாய்! எல்லோரிலும் ஆழப்பதிந்தாய். இப்பதிவுகள் நாம் உன்னை மறவோம் என பறைசாற்றுகின்றது.

எம் தாய் நாடாம் ஈழம்; கடந்த பல தசாப்தங்களாக ஒரு புதிய யுக மாற்றத்தினை நோக்கி இரத்தம் தோய்ந்த வரலாற்றுடன் தன் நகர்வினை செய்த வண்ணம் உள்ளது. இவ் இயற்கை யுகமாற்ற புயல் சூழலில் நீ முன் நின்று செய்த பணி இன்று தமிழ் ஈழபகுதி எங்கும் பதிவாகியுள்ளது. நாளைய வரலாற்றிலும் நீ ஒரு பங்கை எம் மாதகல் பதிக்கு தேடித்தந்துள்ளாய் இத்துணை பேராத்மாவை நாம் எங்ஙனம் மறப்போம். மாதகல் பதியில் பொன்னா (என்போம்) தமிழ் ஈழப்பகுதியில் குமரன் என்ற நாமம் பெற்றாய். இரு தலத்திலும் எமது பராயத்திற்கும் தேவைக்கும் ஏக்கத்திற்கும் கிடைத்த "நற்றுணை" ஆனாய். தேவை ஏற்படும் போது எல்லாம் தலைவன் ஆவாய். ஊர் துண்டாகாது இணைந்து இருக்க பாடு பட்டாய். மேலும் ஒரு படிமேல் சென்று தமிழ் சமுக விசைகள் ஒத்திசைவாக இருக்க பாடு பட்டாய் கடைசியில் அந்த நற்சேவைக்கு கிடைத்த பரிசும் நாம் அறிவோம். அதைக்கூட உனது பெருந்தன்மையால் காலம் தந்த பாடம் என்றாய். ஓயவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாடாம் பிரான்சை வந்தடைந்தாய் உன் பிறவிக்குணமான சமூக சேவையை முன் தொடர்ந்தாய். இவ்வண்ணம் நீ மாதகல் பதி (பகுதி) மக்களினும் ஈழத்தமிழ் பகுதி மக்களிலும் உனக்குரிய முத்திரையை பொறித்தது மாத்திரமல்ல புலம்பெயர் தேசமான பிரான்சிலும் எம் ஆத்மாவில் நீங்காத இடம்பெற்றாய். எவ்வணம் நாம் உன்னை மறப்போம்.

நீ தரித்திருந்த தோற்பையை மாத்திரம் தான் எம் ஊர் வழக்கப்படி தமிழ் பூசகர் சுத்தம் செய்து வாய்க்கு அரிசி போட்டு உன் வாரிசுகள் எமது பிரசன்னத்துடன் அக்கினி பகவானிடம் சேர்ப்பித்தனர். அக்கினி பகவானும் தன்னால் இயன்றதை காவிச்சென்று ஒரு பகுதியை மீதம் விட்டார். நாம் அதனை உனது விருப்பப்படி அத்திலாந்திக் வர்ணபகவானிடம் சேர்த்துவிட்டோம். ஆனால் உன் ஆத்ம நினைவுகள் எம்மை விட்டு பிரியாத எம்முடன் நகமும் சதையுமாக இருக்கிறது. நாம் உன்னை மறவோம். உன் தலைமையில் நாம் எல்லோரும் ஒருங்கிணைந்து உருவாக்கிய மாதகல் நலன்புரிச்சங்கத்தினை உனது பதிவின் குறியீடாக ஏற்றுக்கொள்கின்றோம்.

இதன்படி நீ வெறும் உன் குடும்பத்தின் சொத்து அல்ல எம் ஊரின் ஈழத்தின் பொதுச்சொத்து என பறைசாற்றுகின்றோம். இதனை உன் வாரிசுகள் தமக்கு கிடைத்த பெரும் பேறாக ஏற்று நிற்கின்றனர். இம்முறையில் நீ எமது தமிழ் ஈழ புதுயுகம் நோக்கிய பிரளயத்தின் பாய்ச்சலின் குறியீடாகவும் புலம் பெயர்ந்த மக்களாகிய எமது ஜீவாத்மா ஆக எம்மில் நீங்கா இடம்பெற்று எம் வாழ்வியலை செப்பனிட்டு சரிசெய்யும் முயற்சியில் பாரிய அருவ சத்தியாக எம்முடன் நீங்காமல் நின்று உன் புனித பதிவுகளை தொடருமாறு பிரார்த்திக்கின்றோம்.

"நாம் உன்னை மறவோம்"

எங்களோடு அருவமாக பிணைந்து இருக்குமாறு பிரார்த்திக்கின்றோம்.

பொன்னா பொன்னா பொன்னா

**இப்படிக்கு என்றும் நீங்கா நினைவேந்தல் உடன்**
**மாதகல் நலன்புரி சங்கத்தினர் - டென்மார்க்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவிஸ் மாதகல் நலன்புரிச்சங்கத்தின் புலம்பல்

நாம் பிறந்த மண்ணையும், மக்களையும் ஒன்றிணைக்க சுவிஸ் மாதகல் நலன்புரிச்சங்கத்தில் நிறுவனராக விளங்கிய பொன்னண்ணனே!

ஒலி வாங்கியை கையில் கொண்டு எமது சமூகத்தை ஒன்றிணைத்தீர ஐயா.

மாதகல் மண்ணின் உயர்விற்கு வழிகாட்டியாக திகழ்ந்தீர் ஐயா. எந்த ஒரு விடையங்களையும் முடிவெடுப்பதானாலும் பொன்னண்ணணிடமே கேட்டு விடுவோம். இனி உம் இடத்தில் எமக்கு யார் ஐயா.

எப்போதும் எமது சுமைகளை தாங்கிக்கொள்ளும் சுமை தாங்கி ஐயா நீர்.

உம்மை இவ்வளவு விரைவில் நாம் பறிகொடுப்பதா?

எம்மை சிறப்பான முறையில் வழி நடத்த நீர் இங்கு இல்லை ஐயா.

கடலில் எழுந்து விழும் அலை போல உமது பிரிவால் ஆர்ப்பரித்து புலம்புகிறோம் ஐயா.

**சுவிஸ் மாதகல் நலன்புரிச்சங்கத்தின்**

**நெப்போலியன்**

*லட்சியத்தை அடிக்கடி மாற்றிக் கொள்ளக்கூடாது.*
*அதை அடைவதற்கான வழிமுறைகளை வேண்டுமானால் மாற்றிக்கொள்ளலாம்.*

**விவேகானந்தர்**

*பகை, பொறாமை ஆகியவற்றை நீ வெளியிட்டால் அவை வட்டியும் முதலுமாய் மீண்டும் உன்னிடமே திரும்பி வரும்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரரின் கனவை நனவாக்குவோம்!

'வையத்துள் வாழ்வாங்கு வாழ்வோர் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவர்' என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்து மறைந்த பெருந்தகையே அமரர் பொன்னுத்துரை அவர்கள். ஒருவன் எவ்வளவு காலம் வாழ்ந்தான் என்பதைவிட அவன் எப்படி வாழ்ந்தான் என்பதைக்கொண்டே அவன் பெருமை சமூகத்தால் மதிக்கப்படுகிறது. அவ்வாறு மதிக்கப்பட்டவர்களே காலாகாலமாகப் போற்றிப் புகழப்படுகிறார்கள். இன்று எமது போற்றுதலுக்கு இடமாக இருக்கும் பொன்னுத்துரை அவர்களும் "வல்லமை தாராயோ இந்த மாநிலம் பயனுற வாழ்வதற்கே" என்ற பாரதியின் அடிகளுக்கு ஏற்ப வாழ்ந்தவர் என்பது அவருடன் பழகிய அனைவருக்கும் தெரியும்.

அன்ன சத்திரம் ஆயிரம் நாட்டுவதிலும், ஆலயம் பதினாயிரம் அமைப்பதிலும் வரும் புண்ணியத்தை விட ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தலே சிறந்த தெய்வப்பணி என்பதை மனதார நம்பிய அமரர் அதற்கேற்பவே தமது ஒவ்வொரு செயற்பாடுகளையும் முன்னெடுத்துச் சென்றார். விடுதலைப் வேட்கையோடு செயற்பட்டவேளையிலும்சரி அதை விட்டு ஒதுங்கி இருந்தபோதும் அடிமட்ட மக்களுக்கு ஆதரவுக்கரம் நீட்ட அவர் பின்நின்ற தில்லை. தானுண்டு தன்குடும்பமுண்டென்று ஒரு குறுகிய வட்டத்துள் நின்று என்றும் சிந்திக்காத பெருந்தகையே குமரன், பொன்னுக்கிளி, பொன்னண்ணா என்று சேர்ந்தோரால் அழைக்கப்பட்ட பொன்னுத்துரை அவர்கள்.

மாதகலின் வளர்ச்சியில் நாட்டங்கொண்ட அமரர் மாதகல் நலன்புரி சங்கங்களை பிரான்ஸ், சுவிஸ், இங்கிலாந்து போன்ற நாடுகளில் அமைத்து அவற்றினூடாக மாதகலில் ஒரு மறுமலர்ச்சியைக் காணத்துடித்தார். அந்தத் துடிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயல்வடிவம்பெற அவரோடு கைகோர்த்து வேலை செய்யும் பாக்கியத்தைக் கனடா மாதகல் நலன்புரி சங்கமும் பெற்றுக் கொண்டது. அவர் கனடா வந்திருந்தபோதுகூட விட்டு விலகிநின்ற பலரைச் சந்தித்து மாதகல் முன்னேற்றத்திற்காகப் பாடுபடவேண்டிய தேவையை அவர்களுக்கு எடுத்துக் கூறினார் என்பது நெஞ்சை நெகிழ வைக்கும் நினைவாக வந்து நிழலாடுகிறது.

"பொன்னு" என்றால் 'பொதுவாழ்வு' என்பதை நினைவு படுத்தும் வகையில் அமரரின் வாழ்வு அமைந்திருந்தமை எமக்கெல்லாம் ஒரு முன்னுதாரணமாக இருந்தது, இருக்கிறது, இருக்கும். மேலும் அமரரின் கனவான 'மறுமலர்ச்சி பெற்ற மாதகலை' உருவாக்க அனைவரும் சேர்ந்து ஒற்றுமையாகச் செயற்படுவோம். ஒன்றுபடுவோம் வென்று காட்டுவோம்!

இறுதியாக அமரரின் பிரிவால் வாடும் மனைவி, மக்கள், உற்றார், உறவினர் அனைவருக்கும் கனடா மாதகல் நலன்புரி சங்கத்தின் சார்பில் எமது ஆறுதல்களைக் கூறி விடை பெறுகிறோம். நன்றி.

**கனடா மாதகல் நலன்புரிசங்கம்,**
**கனடா.**

பிறப்பு ஒருவனைத் தூண்டும்போது வாழவேண்டும் என்று எண்ணுகின்றான்.
பருவம் ஒருவனைத் தூண்டும்போது அனுபவிக்க வேண்டும் என்று எண்ணுகின்றான்
அரசியல் ஒருவனைத் தூண்டும்போது உரிமை வேண்டும் என்று எண்ணுகின்றான்.
அடிமைத்தனம் ஒருவனைத் தூண்டும்போது விடுதலை வேண்டும் என்று எண்ணுகின்றான்.
சாவு ஒருவனைத் தூண்டும்போது பரம்பொருள் வேண்டும் என்று எண்ணுகின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிரான்ஸ் மாதகல் நலன்புரிச் சங்க தலைவர் திரு விசுவலிங்கம் பொன்னுத்துரை அவர்களின் மறைவையொட்டி யா/மாதகல் சென் யோசப் மகா வித்தியாலய பாடசாலை அதிபர் திரு. வி. நடராசா அவர்களின்**

# கண்ணீரக் காணிக்கை

மாதகல் மைந்தனும் பிரான்ஸ் நாட்டில் வாழ்ந்தவருமான விசுவலிங்கம் பொன்னுத்துரை அவர்களின் மறைவையொட்டி மாதகல் சென் யோசப் கல்விச் சமூகம் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

திரு. வி. பொன்னுத்துரை அவர்களுடன் எனது பாடசாலை நண்பராகவும், வெளிவாரி பட்டப்படிப்பு மாணவனாகவும் கடந்த நாற்பது வருடங்களுக்கு மேல் நெருங்கிப் பழகும் வாய்ப்பு ஏற்பட்டது. எமது பாடசாலை யா/மாதகல் சென் யோசப் மகா வித்தியாலத்தில் ஒன்றாக கற்ற போது இவரிடம் காணப்பட்ட நல்ல பண்புகளாக தலைமைத்துவம், பிறருக்கு உதவி புரிதல், கிராமத்தின் வளர்ச்சி, தமிழ் இனத்தின் விடுதலை வேட்கை என்பவற்றை புரிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது.

இவர் மாதகல் சென் யோசப் மகா வித்தியாலயத்தில் க.பொ.த சாதாரண தரம் வரை கற்றுவிட்டு உயர்தர கல்வியை வட்டு யாழ்ப்பாண கல்லூரியில் கற்று வெளிவாரியாக பட்டப்படிப்பை என்னுடன் மேற்கொண்டிருந்தார். பட்டப் படிப்பை மேற்கொண்டிருந்த காலத்தில் 1980 ஆண்டு காலப்பகுதியில் தமிழ் இன உணர்வாளராக தமிழ் இனத்தின் விடியலுக்காக தன்னை அர்ப்பணித்துப் பணிபுரிந்தார்.

1987ம் ஆண்டு நாட்டு சூழ் நிலை மிக மோசமான கால கட்டத்தில் தனது உயிரின் பாதுகாப்பிற்காக பிரான்ஸ் நாடு சென்று அங்கு பணிபுரிந்த காலத்தில் தான் வாழ்ந்த கிராமத்துக்கு சேவை செய்யவேண்டும் என்ற நோக்கில் எமது கிராமத்தவர்களையெல்லாம் அரவணைத்து பிரான்ஸ் மாதகல் நலன்புரிச் சங்கத்தை நிறுவி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரான்ஸ் நாட்டில் வாழும் மாதகல் அன்பர்கள் மூலம் எமது கிராமத்தின் வளர்ச்சிக்காக பல்வேறு பணிகளை ஆற்றிவந்தார்.

அந்த வகையில் 2004 ம் ஆண்டு சுனாமியால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளருக்கும், 2009 ம் ஆண்டு வன்னி நடவடிக்கையின் போது அல்லற்பட்டு ஓடி வந்தோருக்கும் கிட்டத்தட்ட பத்து லட்சம் ரூபாவினை அனுப்பி அவர்களுக்கு உதவி புரிந்தமை என்றும் மறக்கமுடியாததாகும்.

மாதகலின் கல்வி வளர்ச்சிக்காக 5ம் தரப் புலமைப்பரிசிலில் சித்தியடையும் ஒவ்வொரு மாணவருக்கும் நிரந்தர வைப்பிலிட்டு பத்தாயிரம் ரூபா வழங்கினார். மாதகல் சென் யோசப், மாதகல் சென் தோமஸ் பாடசாலைகளின் ஆங்கில கல்வி வளர்ச்சிக்கு நிதியுதவி புரிந்து வந்தார். மாதகல் சென் யோசப் மகா வித்தியாலய நூலக வளர்ச்சிக்கு உதவியமை, மாதகல் சென் யோசப் மகா வித்தியாலய விளையாட்டு மைதான கொள்வனவுக்கு ஒன்றரை மில்லியன் ரூபா வழங்கியதுடன் சுவிஸ், லண்டன் நலன்புரிச் சங்கங்களுக்கு நேரில் சென்று நிதியுதவி செய்ய வேண்டுமென கோரி அவர்களை வழிப்படுத்தி ஒரு சேவையாளனாக திகழ்ந்த மதிப்புக்குரிய நண்பனை இழந்து தவிக்கின்றோம். எமது பாடசாலை வளர்ச்சியில் என்றும் கண்ணும் கருத்துமாக திகழ்ந்து எமது பாடசாலை ஒரு உன்னத பாடசாலையாக திகழ வேண்டுமெனவும் இதனூடாக மாதகல் கிராமம் வளர்ச்சியடைய வேண்டுமெனவும் அயராது உழைத்த உத்தமரை இழந்து தவிக்கின்றோம். அவரது இழப்பால் தவித்து நிற்கும் அவரது குடுப்பத்தினருக்கும் ஆழ்ந்த கவலைகளை பகிர்ந்து கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் எமது கண்ணீர் காணிக்கையை அன்னாரது பாதங்களில் சமர்பிக்கின்றோம்.

இங்ஙனம்

**திரு. வீ. நடராசா**

**அதிபர்**

**(யா / மாதகல் சென்ஜோசப் மகாவித்தியாலயம்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டவனை வேண்டுகிறோம்

'ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன்பிள்ளை தானே வளரும்' என்பது ஒரு முதுமொழி. இதை முதுமொழி என்று மட்டும் கூறிவிடாது கிராமத்து மக்களின் நம்பிக்கையென்றும் துணிந்து கூறலாம். இந்தப் பழமொழியில் அமரருக்கு நம்பிக்கை இருந்ததோ இல்லையோ அவரது வாழ்க்கை அதன்வழி சென்றதென்றே கூறவேண்டும்.

எனது சகோதரியின் கணவரான மைத்துனர் பொன்னுத்துரை அவர்கள் பொதுவாழ்விற் காட்டிய கரிசனை எங்கே அவரது சொந்தக் குடும்பவாழ்விற் பாதிப்பை ஏற்படுத்திவிடுமோ என்று பாசப்பிணைப்புள்ள நாம் ஆதங்கப்பட்டதுண்டு. இந்த ஆதங்கம் வெளியார் மட்டிற் காணப்பட்டதே தவிரக் குடும்பத்தைப் பொறுத்தமட்டில் இருந்ததில்லை என்பதை எனது சகோதரியோடு பேசும்போதெல்லாம் கண்டுகொண்டேன். இது அவரது ஆழமான கொள்கைப்பற்று எப்படி அவரது குடும்பத்தையும் ஆக்கிரமித்து இருந்தது என்பதை வெளியாருக்கு எடுத்துக் காட்டுவதாக இருந்தது.

திருமணத்திற்கு முன்பிருந்தே எமது மைத்துனர் பொதுவாழ்விற் கொண்டிருந்த ஈடுபாடு எமக்கெல்லாம் அவரின் போக்குணர்ந்து ஒத்துப்போக உதவியதென்று கூறலாம். மனதிற் பட்டதைப் பளிச்சென்று பயமின்றிக் கூறும் பக்குவமும் துணிவும் அவரிடம் நாம் கண்ட உயர்ந்த பண்புகளாகும். "யதார்த்தவாதி வெகுசன விரோதி" என்பார்கள். அப்படித்தான் யதார்த்தவாதியாக இருந்து தனது மனதிற் பட்டதை வெளிப்படையாகக் கூறியதால் பல சமயங்களில் உயிர் ஆபத்தைக் கூடச் சந்திக்க வேண்டியவராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தார். இருந்தும் அவர் கடைசி வரை தன்னை மாற்றிக் கொள்ளவே இல்லை. தன்னைப் போன்று தனது பிள்ளைகளும், தன்னைச் சுற்றி உள்ளவர்களும் பொதுநல நோக்குள்ளவர்களாக வாழ வேண்டுமென்று அமரர் விரும்பினார். இது என்போன்றவர்களுக்கு அவர்மேல் இனம்புரியாத மரியாதை உணர்வை ஏற்படுத்தியதோடு எமது வாழ்வைப் பற்றி எம்மையும் சிந்திக்க வைப்பதாக அமைந்திருந்தது. 'பூவோடு கூடிய நாராக' நாமும் மாறி மணம்பரப்ப அமரரின் வாழ்வு வழிகாட்டுவதாக அமையட்டும்.

பொன்னுத்துரை எனது மைத்துனர் என்று கூறுவதைவிட நான் அவரது மைத்துனர் என்று கூறிக்கொள்வதில் பெருமையும், மகிழ்ச்சியும் அடைகிறேன். நாம் எல்லோரும் கூடி அவரது ஆத்மா சாந்திபெற ஆண்டவனை வேண்டுவோம். நன்றி.

**மைத்துனர் -**
**சுந்தரலிங்கமும் குடும்பத்தினரும்,**
**கனடா.**

எந்த ஒரு காரியத்திற்கும் நண்பன் மருந்தாவான். ஆனால் நண்பன் ஏற்படுத்தும் காயத்திற்கு மருந்தே இல்லை

உன் நண்பனுக்கா எதை வேண்டுமானாலும் விட்டுக்கொடு. ஆனால் ஒருபோதும் நண்பனை மட்டும் விட்டுக்கொடுத்து விடாதே.

வாழ வைப்பவன் இறைவன். வாழத்தெரிந்தவன் மனிதன். விழ வைப்பவன் துரோகி. தூக்கி விடுபவன் நண்பன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் சித்தப்பா

பலபடிகள் தாண்டி இன்று ஒரு மருத்துவனாய் நானிருக்க நீங்கள் ஒவ்வொரு படியிலும் எனக்கு ஆதரவாய் இருந்தீர்கள்.
நன்றியுடன் உங்களை நான் நினைத்திருப்பேன் எப்போதும்.
சிறுவயதிலிருந்தே பலவழிகளிலும் எங்களுக்குத் துணையிருந்தீர்கள் நீங்கள்
உங்களுக்காக நான் என்ன செய்தேன்????
நினைக்கும்போது என் மனம்தான் கலங்குகின்றது.
நீங்கள் செய்த நற்பணிகளும் உங்கள் புகழும் என்றுமே நிலைத்திருக்கும் இப்பூமியிலே.
உங்களுக்குப் பெருமை சேர்க்க உங்கள் மகனாய் உங்கள் குடும்பத்துடன் நானிருப்பேன்.
இன்று எம் எல்லோருக்கும் தெய்வமாக இருக்கும் உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.

அன்பு மகன்
Dr. தி. இளங்கோ

## என் பாசமிகு மாமாவுக்கு கண்ணீருடன் ஒரு மடல்...

என் திருமணம் முடிந்து மறுநாள் உங்களுடன் தொலைபேசியில் முதன்முதலாக நான் கதைத்தேன்.
உங்கள் அறிவுபூர்வமான வார்த்தைகளும் அன்பான அறிவுரைகளும்.......
நிழற்படத்தில் உங்கள் கம்பீரமான தோற்றமும் என் ஆசான்களை நினைவூட்டின.
ஏப்போதாவது உங்களை நேரில் காணுவேன் உங்களுடன் கதைப்பேன் என்று எண்ணியிருந்தேன்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இமைத்தூறல்...

புகையும் புதைகுழியுமாய் தாய் நாடு - அங்கு
தலைதெறிக்க தாவிதிருந்த மழலையாய் நான்.
சொந்த மண்ணுக்கு மீண்டுவந்த போது
சொந்தம் சொல்லியது சுட்டுவிரல்
புகைப்படத்தை காட்டியே "இவர்தான் சின்னமாமா"
ஞாபகம் இமைகளில் செருகவே சொட்டுகிறது நீர் தூறலாய்.

என் நேரடி விழிவீச்சுக்குள் முகம் கவ்வா மனிதனாய் -மீண்டும்
தன் மண் மிதிக்க முயன்றபோதும் முடியாமல் முற்றுபுள்ளியாய்..
விண்தாண்டி சென்றபோதும் கடல்தாண்டி கைகொடுத்ததை
பல முகநூல்கள் அடுக்கிவைத்தன விண்தாண்டி இங்கேயும்..
முழுமையுணர்ந்த விழிகளின் சுமை கூடவே, சொட்டுகிறது நீர் தூறலாய்...

உம் ஒளிப்பேளை ஒன்றிரண்டு பார்த்திருக்கிறேன்
அது அழகாக சொல்லிசென்றது நீர் ஒரு பகுத்தறிவாளன் என்று..
கடவுளுக்கு பொன்னகை போட்டு அழகுபார்க்கும் காலத்தில்- புன்னகைத்தே
உயிரிழந்த உறவுகளுக்கு கைகொடுததாய் அறிந்திருக்கிறேன்,
சுனாமி சுழல் கொண்டு நீர்த்தாரைகளை குவித்தவேளைகளில்
இப்போ இருமடங்காக நீர்த்தாரை கொட்டுகிறது
இமைகளில் இருந்தல்ல இருதயத்திலிருந்து.

உம் இழப்பினை ஏற்கமுடியாத இவ்விறுதி நாட்களில்
புது காற்றினை கிழித்தொரு கடிதம்வரைகிறேன் கடவுளுக்கு..
பிறர்நலம் புரிந்தோர் பாவியா.. பாதிவழியில் இவர் உயிர்பறிக்க
கடவுளும் செப்புவதாய் இல்லை
கனத்த உம் சேவையை புரட்டிப்பார்க்கவோர்
யுகம் வேண்டும் போல் படைத்தவனுக்கு...

மருமகன்
-நிரோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் இதயத்திலிருந்து...

இழந்துவிட்டோம்... இழந்துவிட்டோம்...
எங்கள் உயிரை இழந்துவிட்டோம்.
மாமா மாமா என்றும்
பொன்னண்ணை பொன்னண்ணை என்றும்
பாசமாய் அழைப்போமே!
இனி யாரைத்தான் நாம் அழைக்க,

எதையும் தாங்கும் இயல்போடு
எங்களைத் தாங்கிய மாமாவே
அழகான வாழ்வொன்றை அமைத்து தந்தீரே
மகிழ்வாய் இருந்த குடும்பம்
சிரிப்பை மறந்து போனதுவே
அமைதியாய் இருந்த வாழ்வில்
புயல் அடித்துப் போனதுவே

ராஜாபோல் உம் முகம்
கம்பீரமான உம் உருவம்
நிமிர்ந்த உம் தோள்கள்
நேர் கொண்ட உம் பார்வை

வானத்து சூரியனாய் வலம் வந்தீரே
வருவோரை எல்லாம் ஆதரித்தீரே
உறுதுணையாய் என்றும் பணிபுரிவீரே
உம் ஞாபகங்கள் என்றும் அழியாது

ஈன்றெடுத்த முத்துக்கள் மூன்று
முத்தான முக்கனிகளை முன்னே வைத்துவிட்டு
கண்ணான செல்வங்கள் கல்வியில் மேன்மைகாண
கற்றபயன் அத்தனையும் காட்டுவதன் முன்னமே
கலைந்து நீரும் சென்றதேனோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீரில் உம் முகம் காண்கின்றோம்
கவலையில் உருகிக் கரைகின்றோம்
எங்களின் தவிப்பிற்கு உம் விடைதான் என்ன?

என்றென்றும் உம் நினைவுகளைச் சுமந்தபடி ஆத்ம சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சசாந்தி!!!

**பிரிவால் தவிக்கும்**
**இராமச்சந்திரன் (பரமேஸ்)**
**குடும்பத்தினர்**

மிக அற்பமான விஷயங்களைப்பற்றி அதிகமாக அறிந்து கொள்கிறவனே நிபுணன் ஆகிறான்.

வீட்டுக்குள் இருக்கும்போது இந்து, முஸ்லிம், கிறிஸ்தவனாக இரு. வெளியில் வரும்போது மனிதனாக இரு.

செய்து முடித்தவன் சாதிக்கிறான். செய்து முடிக்காதவன் போதிக்கிறான்.

எவரிடமும் எதையும் எதிர்பார்க்காதீர்கள். எதிர்பார்த்தால் இறுதிவரை எதையும் சாதிக்காமலே போய்விடுவீர்கள்.

கற்றுக்கொள்ள வேண்டுமா? முதலில் அறிந்தவற்றை சொல்லிக்கொடு! கற்றுக்கொள்வாய்.
பெற்றுக்கொள்ள வேண்டுமா? முதலில் முடிந்ததை அள்ளிக்கொடு! பெற்றுக்கொள்வாய்!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்வாசனை

## ஏக்கம் - 01

தெரியாதது பிறப்பு
தெரிந்தது இறப்பு
மண்ணை நேசித்தேன்
மனிதத்தை நேசித்தேன்
என்னை நேசித்ததால்
மண்ணை நேசிக்க மறந்து விட்டேன்
வீட்டு புளிய மரத்தை நேசித்தேன்
வேப்ப மரத்தையும் நேசித்தேன்
அயலவர்களை நேசித்தேன்
என் தொழிலை நேசித்தேன்
என் சமூகத்தை நேசித்தேன்
கடல் கடந்து வந்துவிட்டேன்
காக்கைகளையும் காணவில்லை
காராம் பசுவையும் காணவில்லை
உற்றாரை காணவில்லை
உறவுகளைக் காணவில்லை
காலங்கள் பல கடந்து
கழிவிரக்கம் கொள்கிறேன்
கடந்த கால பசுமைகள்
இன்று கானல் நீராகியது
நான் அன்று கண்டவைகள்
இன்று காலியாகிவிட்டன
தெரிந்தவர்களும் இன்று இல்லை
அறிந்தவர்களும் இன்று இல்லை
வேப்பமரத்தையும் காணவிலலை
புளிய மரத்தையும் காணவில்லை
அம்மியையும் காணவில்லை
குழவியையும் காணவில்லை
உரல் உலக்கையையும் காணவில்லை
மாட்டு வண்டியை காணவில்லை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ மரத்தையும் காணவில்லை
இவைகளை காவு கொடுத்தது கொடிய போரா இல்லை
நாகரிகம் என்ற கொடிய விசமா?

## ஏக்கம் - 02

இயற்கையை நேசிப்பதை அநாகரிகம் என்கிறார்கள்
முன்னோரின் கொள்கைகளை முடமாக்கிவிட்டார்கள்
பெற்றோரை நேசிக்க மறந்தார்கள்
உடன் பிறப்பை மறந்தார்கள்
உற்றார் உறவை மறந்தார்கள்
வெளிநாட்டு கரன்சிக்கு தாழ் பணிந்து நின்றார்கள்
கள்ள உறுதி பண்ணி கபளீகரம் செய்கிறார்கள்
நாம் சொந்தமென நினைத்ததெல்லாம்
தூரப்போனதென்ன?
நான் தேடுகிறேன் தேடுகிறேன்...
எல்லாமே வெற்றிடமாக தெரிகிறது

## ஊனம் - 01

உடமைகளுக்கு சொந்தக்காரர்கள்
மண்ணும் பொன்னும் மலையளவு உண்டு
உண்பதும் உடுப்பதும் போதும் என்பவர்கள்
மடிநிறைய பொருள் இருக்கும்
மனம் நிறைய இருள் இருக்கும்
கீதா உபதேசம் சுவரில் தொங்கும்
எல்லைக் கல்லை எளிமையாக நகர்த்துவர்
மாற்றான் சொத்தை கபளீகரம் செய்வர்
கள்ள உறுதி பண்ணி உடன் பிறப்பை
உடன் ஏய்ப்பர்
சொத்தை எடுப்பதற்கு சொந்தத்தை சாவு கொடுப்பர்
ஊனமானது இவர்களது உள்ளம்
ஊமையானது இவர்களது இதயம்
மாற்றானை நேசிக்க மறந்த மனிதர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவி கேட்டு வந்தால் ஐயோ! இல்லை என்பார்
பசிக்குது என்று வந்தால் படலையைப் பூட்டிடுவார்
மக்கள் படும் துன்பம் கண்டு மனக்கதவை பூட்டிடுவார்
ஐயோ எனக்கு தொழில் நட்டமென்பர்
கோயில் கல்லில் பெயர் பொறிக்க
கோடி பணம் கொடுத்திடுவர்
ஊர் மக்கள் நலன் நாடி உதவி கேட்டவரை
உதவாக்கரை என்பார்கள்
ஊர் மக்கள் கல்வி பெற ஒருக்காலும் உதவி செய்யார்
ஊனமுற்றோர் உதவி கேட்டால் மனக்கதவை மூடிடுவார்
பிள்ளைகளுக்கு திருமணமாம் பெரும் செலவில் செய்திடுவர்
சீர்வரிசை சீதனங்கள் சிறப்பாக செய்திடுவர்

**ஊனம் -02**

பேரனுக்கும் பேர்த்திக்கும் பிறந்த நாள் கொண்டாட்டம்
பெற்ற மகனுக்கு பெருமெடுப்பில் திருமணமாம்
பெண் வீட்டாரிடம் பெருமளவு பலகோடி
சீதனமாய் தான் பெறுவர்
பிள்ளைகளை விலை பேசி விற்றிடுவர்
மற்றவர்களை மதிக்காத ஊனமனம் கொண்டவர்கள்

**மின்மினிப்பூச்சிகள் -01**

எனக்கு தெரியாதது
மற்றவர்களுக்கு தெரிந்தது
அது நிஜமா நான் அறியேன்
ஆத்மாத்தமான எமது வாழ்வு
பிறப்பும் இறப்பும் எம்மோடு இணைந்தவை

மாதா கோயில் மணியும்
இ.போ.ச. ஓசையும் எமது
காலைக் கடிகாரம்
உதய சூரியனே எமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிய கடிகாரம்
இன்பமும் துன்பமும் எம்முடன்
பிணைந்து நின்றது

கொடிய யுத்தம் எம்மைக் காவு கொண்டது
திரவியம் தேட நாடு கடந்தோம்
எமது உறவையும் தொலைத்தோம்
உணர்வையும் தொலைத்தோம்
அன்பை மறந்தோம் டொலருக்கு அடிமையானோம்
பண்பாட்டை மறந்தோம்
சொந்த நிலத்தில் வேலை செய்வதை தரம் கெட்டது என்றோம்
புலம்பெயர்ந்த நாட்டில் சேவகம் செய்யத் தயாரானோம்
புதிய கலாசாரத்தை தேடுகிறோம்
கலாசாரம் காப்பாற்ற
சங்கீதம் கற்பிக்கிறோம்
பரத நாட்டியமும் கற்பிக்கின்றோம்
ஏன் என்றால் நமது கலாச்சாரத்தின்
பாதுகாவலன் நானே என்போம்

**மின்மினிப்பூச்சிகள் -02**

மரண வீட்டில் மாமிசம் புசிப்பது சரியாம்
பிள்ளைகளுக்கு புலால் தான் பிடிக்குமாம்
அப்பன் செத்து ஆறாம் மாதம் மகளுக்குத் திருமணமாம்
ஏன் என்று கேட்டால் மண்டபத்தின் காசை
இழக்க முடியாதாம்
பாட்டி செத்த பதின்மூன்றாம் நாள்
பேரனுக்கு பிறந்தநாளாம்
ஏன் என்று கேட்டு விட்டால்
கடல் கடந்து வந்து விட்டோம்
கடந்தவைகளையும் மறந்து விட்டோம்
நண்பனின் திருமணத்திற்கு போகவில்லை
ஏன் என்றால் அம்மா செத்து வருடம் ஒன்று ஆகவில்லை
பேரன் செத்து எட்டாம் மாதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேத்திக்கு திருமணமாம்
எங்கள் பிள்ளைகள் இங்கே பிறந்தவர்கள்
எங்கள் கலாசாரம் அவர்களுக்கு தெரியாதாம்
எங்கள் சந்ததியுடன் எங்கள் கலாசாரம் முடிந்து விடுமாம்
ஏன் என்றால் அவர்களது சந்ததி இதை படிக்காதாம்
அப்படியானால் நீ இப்போ என்ன செய்கிறாய்?
அரங்கேற்றம் செய்கிறாய்
இருபத்தோராவது பிறந்தநாள் நடத்துகிறாய்
வளைகாப்பும் நடத்துகிறாய்
அறுபதாம் திருமணமும் நடத்துகிறாய்
சங்கீதமும் படிப்பிக்கிறாய்
ஏன் எம்மைப்பற்றி பேசவில்லை

## இந்திரலோகம் - 01

இந்திரலோகத்தை நாம் யாருமே பார்த்ததில்லை
இதுவாகத்தான் இருக்கும் இந்திரலோகம்
அவர்கள் மெத்தப் படிக்கவில்லை
தங்களைத்தவிர வேறு எதுவும் அவர்களுக்குத் தெரியாது
கூட்டுறவு வாழ்க்கை கொடி கட்டி பறந்தது
உழவுத் தொழிலே உயிர் மூச்சு
ஓலைத்தாழ்ப்பில் உறவுகள் ஒன்று கூடி வேலை செய்வர்
காலை உணவாக பழந் தண்ணீர்
பிழாவில் கூடிக்குடிக்கும் குதூகலம்
அரிவி வெட்டும் சூடுமிதிப்பும்
சுற்றம் கூடி சுமந்து செல்லும்
ஐயனாரின் அபிசேக மோதகமும்
வைத்தியின் கள்ளும் வயித்தை நிரப்பும்
முரல் குழம்பும் முரல் சொதியும் மூச்சை பிடிக்கும்
வெங்காய நடுகையும்
களை எடுப்பும் பெண்கள் வேலை
மாசிமாதம் மாதா ஊர்வலம்
சித்திரை மாதம் நுணசைத் திருவிழா
காண்டாவனம் முடிந்துவிட்டால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலியாணம் களை கட்டும்
திடீர் கலியாணம் சோறு கொடுப்பது
கலியாண விருந்து கிடாய் அடித்து சாப்பாடு கொடுப்பார்
தாலிகட்ட சுற்றம்கூடி பலகாரம் பண்ணுவர்
இங்கு கடைசியில் சண்டைகளும் உண்டு
பின்பு சமாதானமும் உண்டு
மரணவீட்டில் உரிமை பிரச்சனை சின்னதாக முளைவிடும்
பாடை தூக்க பறை மேளம் பிடிக்க
ஒப்பாரி வைத்து உறவு பற்றி பேசுவார்
அத்தோடு உறவு பிணக்கு பற்றியும் சொல்லி அழுவர்

## இந்திரலோகம் - 02

மரணவீட்டில் முப்பத்தொரு நாளும் கூடி உண்பர்
சபை குழப்ப வாழையிலை கயக்குவர்
அந்தியேட்டிக்கு அனைவரும் ஒன்று சேருவர்
அங்கு அடிதடியும் உண்டு
பின்பு ஐக்கியமும் உண்டு
இன்பத்திலும் துன்பத்திலும் இணைபிரியாது சேர்ந்திருப்பர்
ஒருவருக்கு துன்பம் எனின் ஓடோடி உதவி செய்வர்
சொந்த உழைப்பில் நம்பிக்கை கொண்டவர்கள்
சொந்த உழைப்பால் உயர்ந்து நின்றவர்கள
சொர்க்கபுரியை சொந்த உழைப்பில் கண்டவர்கள்

குரக்கன் பிட்டும் ஒடியல் பிட்டும்
கூடிக்குலாவும் பழைய சோற்றுடன்
கருவாட்டு குழம்பும்
கவனமாய் உட்செல்லும்
பனை மரத்து பினாட்டும்
தென்னைமர தேங்காய் சொட்டும்
தேன் அமுதம் போலிருக்கும்
சாமிக் கஞ்சி சமயத்திற்கு உதவும்
எள்ளும் பனம் கட்டியும்
எளிமையாக ஒன்று சேரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடல் உபாதைக்கு ஒடியல் கூழே
ஒட்டி மீனுடன் ஒவ்வாமை தீர்க்கும்
பயிரிக்கறியும் குறிஞ்சா வறையும்
குளிர் காலத்தில் சூடாக்கும்
பெரு வெள்ளம் வந்துவிட்டால்
தூதுவளைச் சம்பலும் முசுட்டை வறையும்
வயிற்றுடன் கலக்கும்
மண வீட்டிலும் மரண வீட்டிலும் மறுநாள் சொந்தங்கள் சேர்ந்து
சோறு குழைத்து கவளமாக உண்பது சொர்க்க உலோகத்து
அமிர்தம் போலாகும்
ஆக மொத்தம் நாம் காக்கைகளாக இருந்தோம்
கொடிய யுத்தம் எம்மை காவு கொண்டதா
போலி நாகரீகம் புண்படச் செய்ததா?

**கலாசாரம் -01**

மார்கழி மாதம் திருவெம் பாவை
வெள்ளி தோறும் ஆலய தரிசனம்
ஞாயிறு தோறும் மாதா பூசை
மாசி மாதம் கெபிப் பெருநாள்
சித்திரை வைகாசி முருகனுக்கும் அம்மனுக்கும் திருவிழா
மரண வீட்டில் மதச் சடங்குகள்
வேதம் தெரிந்தவர் வேதம் ஓதுவர்
பண்ணிசைகள் பண்ணோடு இசைப்பர்
திருமண பந்தங்கள் ஆலயத்தில் நடந்தேறும்
தலைத் தீபாவளி கொண்டாடப்படும்
பணச்சடங்கும் இங்கே தவறாது நடக்கும்
பூப்புனித நிகழ்வுக்கு புரோகிதர் வரமாட்டார்
மரண வீட்டிற்கும் புரோகிதர் வரமாட்டார்
இரத்த உறவே வம்சாவளிக் கோட்பாடு
இரத்த உறவினர் இருந்து விட்டால்
வருடம் ஒன்று வம்சாவழிகளுக்கு கொண்டாட்டம்
தடை செய்யப்பட்டது
தப்பித் தவறியும் தவற விடார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் வழி தொடர்பே இரத்த உறவு
மரண வீட்டில் மாமிசம் புசிக்கார்
கவரிமான் வழிவந்த கண்ணிய மனிதர்கள்
திருமண வீட்டில் சொந்தம் சேர்ந்து பலகாரம் செய்வர்
உறவையும் பகையையும் பேசித்தீர்ப்பர்
புது நாகரிகம் தேடி புது தேசம் புகுந்தனர்
பூப் புனித விழாவிற்கு புரோகிதரும் வந்தனர்
திருமண விழா புரோகிதரின் வசதிப்படி
சாத்திரங்கள் எல்லாம் மண்டப
படப் பிடிப்பாளரிடம் அடைவு வைத்தாச்சு
கலியாண விளம்பரங்கள் குடும்பப் பெருமையுடன்
முகப்பு புத்தகத்தில்

**கலாசாரம் - 02**

விழாவிற்கு வருவோருக்கு அன்பளிப்பு அள்ளி
வழங்கப்படும்
குடும்ப பெயர்கள் வசதிக்காய் மாற்றப்படும்
கலாசாரம் காக்க பரத நாட்டியமும்
கர்நாடக சங்கீதமும் நட்டு வாங்கத்துடன்
நயமான வயலினும் நாள்தோறும்
அரங்கேற்ற மேடையிலே
அடையாள அணி வகுப்பும்
பற்று வரவும் பவ்வியமாக நடந்தேறும்
விருந்தினருக்கு வீட்டில் சமைப்பது வெட்கக் கேடாம்
ஓடர் கொடுத்த வீட்டில் ஓடி வரும் உணவுப்பண்டம்
சமையல் செய்தால் துர்நாற்றம் வீசுமாம்
பல லட்சம் வீடு பழுதாகி போய்விடுமாம்
அலங்கார பொருட்களிற்கு அளவில்லை வீட்டில்
வயதான பெற்றோர்கள் காப்பகத்தில் தான் இருப்பார்
சீட்டு பிடித்து சீர் வரிசை சேர்த்திடுவர்
பாவம் பழி தீர்க்க பரிகாரம் பண்ணிடவும்
தான தர்மங்கள் தவறாது செய்திடுவர்
இவர்கள் தான் இக்கால நாகரிக மனிதர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூட்டு - 01

கொட்டைக்காடும்
கூவ நாடும்
மாதர் கடவையும்
கூடிக்குலாவும்
பருவம் அடைந்தால் கல்விக்கு தடை
வயசுக்கு வந்துவிட்டால் வாசல்படி தாண்ட தடை
கடைத் தெருவும் பட்டிளப் பயணமும்
பெண்களுக்குதடை
சோறு கொடுப்பது திருமண பந்தம்
சீா வரிசை வீடும் நிலமும் தங்க நகையும்
கட்டாய திருமணம் கடத்தி செல்லல்
உறவைக் காட்டி ஒன்று சேருதல்
கொட்டைக்காடும் கூவநாடும் மாதா் கடவையும்
இணைவதுதான் திருமணம்
மரண வீட்டில் முப்பத்தொரு நாளும் உறவுகளின் ஒன்று கூடல்
காலையும் மாலையும் ஒப்பாரி ஒலிக்கும்
மதியமும் இரவும் கூடி உண்பார்கள்
குடும்ப உறவுகள் இங்கே கூடி குதூகலிக்கும்
இவா்களுடன் உடையாரும் உண்டு
கிளாக்கரும் உண்டு
இவா்கள் மெத்தப் படித்தவா்கள்
அவா்களும் இவா்களும் திருமண பந்தம் தீண்ட தகாதது
ஆண்கள் மட்டும் அவா்கள் வீட்டில்
கை நனைப்பாா்கள்
பெண்கள் மரண வீட்டிற்கும் திருமண வீட்டிற்கும்
செல்வாா்கள் கை நனைக்க மாட்டாா்கள்
அவா்களுக்கு தனித்துவமும் உண்டு

## பூட்டு - 02

வேலிக்கு வெளியில் தலை தெரியா பெண்கள்
பாடசாலை பெண்களுக்கு தடை
திருமண பந்தம் சிக்கலானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப்பித்தவறி சென்று விட்டால்
தாய் குரங்கின் பிடியில் இருந்து
விழுந்த குட்டி மாதிரி
பந்தியிலும் சேர்க்க மாட்டோம்
இந்த பெண்களும் தன்னினம் சாரா
வீட்டில் கை நனைக்க மாட்டோம்
நமக்கு தெரியாத தலைமுறை விலங்கு
உடையாத விலங்கு எப்படி உடைந்தது
உரிமை போராட்டம் உடமைகள் தொலைந்தது
பூர்வீக பூமியை துப்பாக்கி சனியன் சல்லடை போட்டது
உயிர்பிச்சை கேட்டு ஊர் ஊராய் ஓடினர்
புதிய மாற்றங்கள் இவர்களுடன் புணர்ந்தது
மனமாற்றம் மணமாற்றம் எல்லாமே நிகழ்ந்தது
புலத்து இடப் பெயர்வு உடையாத
விலங்கை உடைத்து விட்டது
பல தலைமுறை காத்த பாரம்பரியம்
பரிகாசப் பொருளாக மாறிவிட்டது

கூவ நாடும் கொட்டைகாடும் மாதர் கடவையும்
கிளாக்கரும் உடையாரும் மேற்காரும்
வண்டில் காரரும் தூரதேசத்தை கண்டு பிடித்தனர்
சீமைச்செழிப்பால் கலப்பு திருமணத்தை
கௌரவமாய் கொண்டனர்

**அன்னாரின் உள்ளத்தில் தோன்றிய**
**கவிதைகளை இவ்வேட்டில் பதிவாக்கியுள்ளோம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்க் கலாசாரத் துளிகள் சில...

1) வீடுதேடி வரும் விருந்தினரை உபசரித்து அனுப்புவது எமது பண்பாட்டின் ஊற்றாகும். இன்றைய நவீனகால நாகரிக வாழ்வு மாற்றங்களை கலாசாரத்தின் பண்பாட்டில் பல தாக்கங்களை புகுத்திவிட்டது. எனினும் எம்மக்கள் விருந்தினரை உபசரிப்பதை மறப்பதில்லை.

2) பேரண்டப் பொருளியல் மக்களின் வாழ்க்கை முறையில் நடையுடை பாவனைகளில் தாக்கம் ஏற்படுத்துகிறது. இதனால் இன்று நாகரிக உடைகளாக ஆண்கள் காற்சட்டை சேட் லுங்கியுமாக மாறிவிட்டனர். பெண்கள் சாறிகளை மறந்து சுடிதார் ஆகவும் (இதனை இலங்கையில் பஞ்சாபி எனவும்) மாறிவிட்டது. ஜப்பானியர் தமது கலாசார உடையை தமது வாழ்க்கையில் மறக்காமலிருக்க முக்கிய வைபவங்களில் தமது பண்பாட்டு உடையை அணிந்து வருகின்றனர். நாம் இன்று கோயில் முக்கிய திருவிழாக்களிலும் திருமண வீடுகளிலும் எமது கலாசார உடையை மறந்து நாகரிக உடைகளில் வலம் வருகின்றோம். சைவ ஆண்கள் வேட்டி சால்லை அத்துடன் சேட் அணிவதும் பெண்கள் சேலை அணிதலும் சிறந்தது.

3) ஒருவனுக்கு ஒருத்தி என்பது தமிழர் பண்பாடு. இன்று மேல்நாட்டு மோகம் திருமணவாழ்வை சீரழித்துள்ளது. பற்றில்லாத் தம்பதியினர் ஒருவர்மேல் மற்றவர் குறைகள் காணவிழைந்தனர். இதனால் நீதிமன்றம் சென்று பிரிவு பெறுகின்றனர். பின்னர் வேறு திருமணமும் செய்து கொள்கின்றனர். இன்றும் துணையின் இறப்பினாலும் ஒருவன் ஒருத்திக்காக வாழ்பவர்களைக் காண்கின்றோம்.

4) தமிழர் சமூகத்தில் கற்புக்கு உயரிய இடம் வழங்கப்படுகிறது. பெண்களின் கற்பு சமூகத்தில் உயர்த்திப் பேசப்படுகிறது. எனினும் ஆணின் கற்பு வலியுறுத்தப்படுகின்றது. இன்று கல்விகற்ற பெண்கள் வேலைதேடி வேற்றிடங்களுக்கு செல்லும் நிலையில் பலருடன் சேர்ந்து வேலையில் ஈடுபடுகின்றனர். இவ்விடத்தில் பெண்கள் தமது கற்பினை காத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம் பொருளாதாரத்தை மேம்படுத்துகின்றனர். புலம்பெயர் பெண்கள் பல்வேறு சூழலிலும் தமது கற்பினைக் காத்துவருவது போற்றத்தக்கதாகும். இன்று சிலருக்கு கற்பு வேண்டப்படாது வருகிறது. ஆனால் கற்புடையவர்கள் எயிட்ஸ் நோயில் இருந்து தப்பித்துக் கொள்கின்றனர்

5) தமிழர் வாழ்வில் மறவர்கள் சிறப்பிடம் பெறுகின்றனர். அக்காலம் வீரமானவர்களுக்கு நினைவுக்கற்கள் கட்டப்பட்டன. இன்றைய காலம் போராட்டங்களின் போதும் தமிழர் வீரத்தைக் கண்டோம். பண்டைய புறநானூறு கூறும் வீரமறவர் ஈழ மண்ணில் நாட்டுக்காக தமதுயிர்களை நீர்த்தனர் வீர மறவர்கள். மறவர்களைப் போற்றும் பண்பு தமிழர்களிடையே இன்றும் நிலைத்து நீடித்து வாழ்கிறது.

6) சங்ககாலம் காதலும், வீரமும் போற்றப்பட்ட காலம். சங்ககால அகநானூறு காதலை சிறப்பித்து நிற்கிறது. படை நடத்திய அரசனோடு சென்ற மறவர் மேல் தமிழ் பெண் காதல் கொண்டனர். அவர் தாம் திரும்பி வரும்வரை அவருக்காக ஏங்குவதை கலிங்கத்தப் பரணியில் காணலாம். இன்று கைத்தொலைபேசியில் பலரோடும் உறவாடுகின்றனர். இதன்மூலம் காதலினை விட்டு இறுதியில் கைவிட்டுச் செல்கின்றனர்.

7) தமிழர் வாழ்க்கை கூட்டு வாழ்க்கையாகும். ஒரே வீட்டில் பூட்டன், பூட்டி, பாட்டன், பாட்டி, தாய், தந்தை, மகன், மகன்மார், பேரன், பேத்தி என வாழ்ந்தனர். சில வீடுகளில் தலைமுறையினர் கூட்டாக வாழ்ந்ததையும் காணலாம். இதன் மூலம் இளம் சந்ததியினர் பல வழிகளில் பயன்பெற்றனர். இன்று இயந்திர கதி வாழ்க்கை தன்னைப் பற்றியும் தன் குடும்பம் பற்றியுமே சிந்திக்க முடிகிறது. நாற்சார விட்டில் வாழ்ந்ததினால் போய் தனி அறைதேடும் நிலையில் உள்ளோம்.

**தொகுப்பு:**

**வி. சிற்றம்பலம்**

**ஓய்வுபெற்ற கோட்டக்கல்விப் பணிப்பாளர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழீழம், தமிழகம், பிரான்ஸ் என்று தான் வாழ்ந்த மண்ணிலெல்லாம் இனப் பற்றோடும், ஊர்ப்பற்றோடும் தனது வாழ்நாளைக் கழித்த மதிப்பிற்குரிய


**மாதகல் மைந்தன் வீ.பொன்னுத்துரை**

அவர்களின் மறைவையொட்டிக் கனடா மாதகல் நலன்புரி சங்கம் செலுத்தும் கண்ணீரஞ்சலிகள்.

# போராளி நீ

அற்புதம் அற்புதம் **பொன்னுத்துரை**
ஆற்றிய சேவைகள் அற்புதம்பார்!
மற்றவர் துயரத்திற் பங்குகொண்டாய்!
மனதாரப் பிறருக்கு உதவிசெய்தாய்!!
பற்றுடன் மொழிஇன உணர்வுதாங்கிப்
பயணித்த தமிழினப் **போராளிநீ**
வெற்றிடம் ஒன்றைநீ எங்கள்முன்னே
விட்டெங்கு சென்றிட்டாய் சொல்லுநண்பா!
1

தேடினும் கிடைக்காத செல்வமென்று
சேர்ந்தவர் போற்றிட வாழ்ந்தவன்நீ
வாடிநாம் கலங்கிடச் செய்துவிட்டாய்!
வாழ்வையேன் முடித்தெமை மறந்துவிட்டாய்?
ஈடிலா இழப்பினைத் தந்துவிட்டாய்!
எம்மவர் உள்ளதிற் துயர்விதைத்து
ஓடிநீ போனதேன் சொல்லுநண்பா!
உன்னைநாம் இனியென்று காணுவோமோ?
2



பொன்னென்ற வார்த்தைக்கு ஏற்றாற்போன்று
புத்தொளி பரப்பியே வாழ்ந்தவன்நீ
என்னென்று சொல்லுவோம் உன்னிழப்பை
இதயத்தைப் பிழிந்திடும் துயரந்தன்னை,
முன்னின்று வழிகாட்டி வந்தஉன்னை
மூச்சற்றுப் பார்க்கவா உயிர்தரித்தோம்
உன்னன்பின் ஆழத்தைப் புரிந்துகொண்ட
ஊர்மக்கள் தலைசாய்த்துவணங்குகின்றோம்
3

மாதகல் மண்ணுக்குப் பெருமைசேர்த்த
மாவீர னாயுன்னைக் கருதுகின்றோம்!
சோதனை பலகண்டும் சலித்திடாது
சுதந்திர ஈழத்திற் பற்றுவைத்துச்
சாதனை வீரனாய் வாழ்ந்தவன்நீ
சலசலப் பில்லாது இனத்துக்காகக்
காதலாய் மூச்சற்றுப் போகுமட்டும்
கருமங்கள் ஆற்றினாய் மறக்கமாட்டோம்
4

வன்னிமண், தமிழகம் எல்லாம்சென்று
வாழ்ந்துநீ மண்மீட்கப் பாடுபட்டாய்
உன்னத நோக்குடன் சேவைசெய்த
உன்புகழ் என்றென்றும் வாழுமையா!
அந்நிய மண்ணிற்கு வந்தபின்பும்
அழியாத இனப்பற்றை நெஞ்சிற்றாங்கி
எண்ணிலாக் கருமங்கள் ஆற்றினாய்நீ
இருகரம் கூப்பிநாம் வணங்குகின்றோம்!
5

ஊருக்கு உழைத்திட்ட உத்தமன்நீ!
உண்மையின் மறுபேராய்த் திகழ்ந்தவன்நீ!
யாருக்கு மஞ்சாது வாழ்ந்தவன்நீ!
நாட்டுக்கு பெருமையைச் சேர்த்தவன்நீ!
'பாருக்குள் உன்னைப்போல நல்லஉள்ளம்
பார்த்திட முடியுமோ' என்றுபோற்றும்
பேருக்கு இலக்கண மாகவாழ்ந்தாய்!
பிரிந்துநீ எங்குற்றாய் கூறுநண்பா!
6

**கனடா மாதகல் நலன்புரிசங்கம் கனடா.** (கவிதை 'அருள்மணி')



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் காணிக்கை



| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 14 | 18 |
| 04 | 07 |
| 1954 | 2013 |

புலம்பெயர்ந்த மாதகல் நலன்புரி சங்கங்களின் செயற்பாட்டாளரும்
பிரான்ஸ் நலன்புரிச் சங்கத் தலைவருமாகிய

## அமரர்
## விஸ்வலிங்கம் பொன்னுத்துரை

பாசத்தின் சிகரமே நேற்று இருந்த
நீங்கள் இன்று எங்கு சென்றீரோ?
கணப்பொழுதினில் காலன்
உங்களை கவர்ந்து சென்றானோ?
நம்ப முடியவில்லை பதறித் துடிக்கின்றோம்
சிரித்து சிரித்து பேசிய உங்கள் அன்பு முகம் எங்கே?
இனிமையாய் அரவணைத்த
உங்கள் அன்பான வார்த்தைகள் எங்கே
தேடுகின்றோம் – இனி எங்கு
நாம் உங்களை காண்போம்

**பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

**இவரின் ஆத்மா அமைதி பெற ஆண்டவனை வேண்டுகின்றோம்.**

பிரிவால் துயருறும்
மாதகல் சித்தி விநாயகர் முன்பள்ளி
முகாமைத்துவக் குழு

20. 07. 2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

தாயின் மடியில்
14 - 04 - 1974



ஆண்டவன் அடியில்
17 - 07 - 2013

## விஸ்வலிங்கம் பொன்னுத்துரை

மன்னனே பொன் அண்ணனே!
தமிழுக்காய் வாழ்ந்த எங்கள் கண்ணனே
மாதகல் நலன்புரிச் சங்கம் அமைத்தாய்
அதன் தலைவனாகி பல சேவை புரிந்தாய்
தமிழ் உறவுகள் அனைவரையும்
ஒன்றாய் இணைத்தாய்
விருதுகள் பலவற்றை வென்று குவித்தாய்
எல்லோர் இதயத்திலும் நிலையாய் நின்றாய்
நிலைக்கும் உன் குரல் என்று காத்திருந்த
வேளைதனில் ஓய்ந்ததுவோ உன்
இதயத்தின் துடிப்பு
இறந்தும் சிலர் இன்றும் வாழ்கின்றனர்
பலர் மனங்களிலே
நீயும் வாழ்வாய் உன் புகழ் அழியாது

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் வாடும்
பிரான்ஸ் வாழ் மாதகல் உறவுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீரஞ்சலி

## திரு.விஸ்வலிங்கம் பொன்னுத்துரை
(தலைவர் பிரான்ஸ் மாதகல் நலன்புரிச்சங்கம்)

பிறப்பு
14-04-1954

இறப்பு
18-07-2013



காலநிர்ப்பந்தத்தால் அலையேற்றிய சருகாய்

எங்கெங்கோ கரையொதுங்கிய ஊரினிதயங்களை

தேடிப்பொறுக்கி ஒன்று சேர்த்து

பாறைபிளந்து பயிர்வளர்த்தோன் பரம்பரை

« சோர்ந்தோர் மூலையில் கிடைத்தலென்ன விதிஎன்று »
பாதைபோட்டு வழிநடத்திய எம்தலைவா பாதிவழியில்
எமைத்தவிக்க விட்டுசென்றதுமேன் ?

ஒன்றுபட்ட உழைப்பு ஒன்றே நம்மை உயர்த்துமென்று
தட்டிக்கொடுத்தும் தடவிக்கொடுத்தும் எம்மோடு தோள்கொடுத்து
நின்ற எம்தலைவா இன்று நீ எம்மருகில் இருக்கும் பொசிப்பிழந்து
போனோமே இனி யாரெமக்கு உன்போல ?

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வேண்டி பிரார்த்திப்பதுடன்,
இவரின் மறைவால் துயருறும் மனைவி,
பிள்ளைகள்,உறவினர்கள்,நண்பர்களிற்கும் எமது ஆழ்ந்த
அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

## பிரான்ஸ் மாதகல் நலன்புரிச்சங்கம்

WWW.MATHAGAL.NET

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீரஞ்சலி



தோற்றம்
14.04.1954

மறைவு
18.07.2013

## திரு விஸ்வலிங்கம் பொன்னுத்துரை

யாழ். மாதகல் வில்வளையைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் Paris யை வதிவிடமாகவும் கொண்ட விஸ்வலிங்கம் பொன்னுத்துரை அவர்கள் 18-07-2013 வியாழக்கிழமை அன்று இறைபதம் அடைந்தசெய்திகேட்டுக் கனடாவாழ் மாதகல் மக்களாகிய நாம் ஆழ்ந்த கவலையடைவதோடு அன்னாருக்கு எமது அஞ்சலிகளையும் இத்தாற் தெரியப்படுத்துகிறோம்.

அமரரின் பிரிவால் வருந்தி வாடும் மனைவி, பிள்ளைகள், மருமக்கள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் கனடா மாதகல் நலன்புரி சங்கத்தினராகிய நாம் மாதகல் மக்கள் சார்பில் எமது ஆழ்ந்த கவலையையும் ஆறுதலையும் வெளிப்படுத்தி நிற்கிறோம்

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

கனடா மாதகல் நலன்புரி சங்கம்.
கனடா
2013-07-18



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



அன்னை மடியில்
14.04.1954

ஆண்டவன் அடியில்
18.07.2013

**பொன்னண்ணன் என்று அன்பாக அழைக்கப்படும் பெருமகனே!**
மாதகல் மண் பெற்ற பெருந்தலைவன் நீ.
மண்ணிற்காகவும், மக்களிற்காகவும் உன் உதிரத்தில் உறைந்ததோ சுதந்திர வேட்கை.
மாதகல் மண் என்ற மையப்புள்ளியை எம் இனத்திற்கு அடையாளம் காட்டிய மாவீரன் நீ.
எப்போதும் ஓர் இளமைப்புன்னகையுடன் எம்மில் இரண்டறக்கலந்த தோழன் நீ.
தேசம் விட்டு நாம் வாழ்ந்தாலும் நாம் பிறந்த மண்ணின் உயர்விற்காக மாதகல் மக்கள் அனைவரையும் ஒன்றிணைத்து சுவிஸ் மாதகல் நலன்புரிச்சங்கம் உருவாக வேண்டும் என்றும், அதனை வளர்க்க நாம் எவ்வாறு விடாமுயற்சியுடன் செயற்பட வேண்டும் எனவும் உணர்வு பூர்வமாக உணர்த்திக்காட்டியவன் நீ.
இன்று சுவிஸ் மண்ணில் சுவிஸ் மாதகல் நலன்புரிச்சங்கம் பெரு வெற்றியுடன், உன் ஆசியுடன் வளர்ச்சியை எட்டியுள்ளது.
பொன்னண்ணன் என்ற பெருமகன் கண்ட கனவு நனவாகியது.
பேரிடியோடு வந்த செய்திகேட்டு செய்வதறியாது நிற்கின்றோம்.
சிறந்த தொண்டனை, பண்பாளனை நாம் இழந்துவிட்டோமா?
தலைமகனின் மரணச்செய்தி எமக்கு பேரிழப்பானது.
மாமனிதனாக வாழ்ந்த உனக்கு மரணமென்பது ஏது......
மனிதநேயத்தைக் காக்க துடித்தவன் மரணிப்பது இல்லை.
உமது ஒவ்வொரு கனவுகளும் நீர் சொல்ல, செய்யத்துடித்த அத்தனை செயலையும் செய்து முடிக்க தோழர்கள், உறவினர்கள் என ஆயிரமாயிரம் பேர் உன் இலட்சியவழியைப் பின் தொடர்வோம்.

**உன்னைப்போன்ற சிறந்த தலைவனை தேடுகின்றோம் ஆற்றாமையுடன்**

எமது கண்ணீர்த்துளிகளை காணிக்கையாக்குகின்றோம், உமது ஆத்மசாந்திக்காக பிரார்த்தனைகளுடன்....

சுவிஸ் மாதகல் நலன்புரிச்சங்கம்

WWW.MATHAGAL.NET



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் காணிக்கை



தோற்றம்

14 - 04 - 1954

மறைவு

18 - 07 - 2013

மாதகல் மண்ணின் மைந்தன்

## அமரர்

## விஸ்வலிங்கம் பொன்னுத்துரை

நேற்றுச் சிரித்தபடி நிஜமாய் இருந்தவரே
கண்மூடி விழிப்பதற்குள்
கதை முடிந்து போனதெங்கே
ஈவிரக்கம் இல்லா காலனவன்
எங்குதான் கொண்டு சென்றான்
ஊதிய பாலூனில் ஊசி துளைத்தது போல்
உங்கள் மறைவுச் செய்தி கேட்டு
உதிரமே உற்றைந்ததையா
காலமது இட்ட கட்டளையோ
காற்றோடு காற்றாக கலந்தாயே
ஆறாத துயரினை எமக்கு அளித்து விட்டு
மீளாத துயிலினை நீ தழுவியதேனோ

**பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

**இவரின் ஆத்மா அமைதி பெற ஆண்டவனை வேண்டுகின்றோம்.**

பிரிவால் துயருறும்

**மாதகல் - சுவிஸ் நலன்புரிச்சங்க**
**கணனி பயிற்சி நிலைய**
**நிர்வாகிகளும், ஆசிரியர்களும்,**
**மாணவர்களும்**

**22. 07. 2013**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்

1954 . 04 . 14

மறைவு

2013 . 07 . 18

## அமரர்
## திரு. விஸ்வலிங்கம் பொன்னுத்துரை
## (மாதகல்)

கனிவான தோற்றம் எம் கண் நிறைந்து நிற்குதடா நண்பா
மரணம் நிச்சயமே மறுக்கத்தான் முடியாது! அது நியதி
ஆனால் மனம் அதை ஏற்குதில்லையே நண்பா!
குடும்பத்தார் கதறியழ உற்றவர்கள் உருகி நிற்க
நண்பர்கள் கலங்கி நிற்க பாரினில் நீ மறைந்த மாயமென்ன
அன்பு நண்பா நீர் எம்மோடு பழகித்திரிந்த
காலங்களை நினைக்கின்றோம்
உன்னை எண்ணினால் கண்களில் கங்கையே ....
ஆறுதல் சொல்ல ஆண்டவனே வந்தாலும்
உன் ஆருயிர் அன்புக்கு ஈடாகுமா?
தெய்வீக முகத்திற்கு இணையாகுமா?
ஏக்கத்தின் எல்லைதனில் எம்மையெல்லாம் தவிக்கவிட்டு
பாரினில் நீ மறைந்த மாயமென்ன?

**அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன்**
**அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர்க்கு**
**எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

**பிரிவால் துயருறும்**
**நண்பர்கள்**
காஞ்சிபுரம், மாதகல்.

23. 07. 2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதகலான் மைந்தன் அமரர் விஸ்வலிங்கம் பொன்னுத்துரை
அவர்களின் மறைவுக்கு பிரித்தானிய வாழ் மாதகல் மக்களின்

# கண்ணீர் அஞ்சலி

அன்னையின் மடியில்
14
04
1954



ஆண்டவன் மடியில்
18
07
2013

மாதகலான் மைந்தன்

## திரு விஸ்வலிங்கம் பொன்னுத்துரை

மாதகல் நகரில் பிறந்து - பிரான்ஸ் நகரில் வாழ்ந்து
எம் இதயம் தொட்ட இனிய மாதகலான்
பொன்னுத்துரை என்ற பெயருக்கு ஏற்றாற்போன்று
பொன் தங்கமாய் விளங்கியவன் - நீ
மாதகல் மக்கள் நலன் ஒன்றுசேர வழிகாட்டியவன்
மாதகல் மண்ணுக்குப் பெருமை சேர்த்தாய் - நீ
சுனாமி சிறுவர்களின் எதிர்கால வாழ்வை வளமாக்க
இரவு பகல் பாராது அங்கத்தவர்களை
இணைத்து சேவை புரிந்தாய்...
ஊருக்காய் உழைத்த உத்தமன் - நீ
மற்றவர் துயரத்தில் பங்கு கொண்டாய்
பற்றுடன் பிறருக்கு உதவி பல செய்தாய்
எம் தமிழினப் போராளி - நீ
எங்கு தேடினும் கிடைக்காத மாதகலான் மைந்தன் செல்வமடா - நீ

அன்னாரின் ஆத்ம சாந்தி வேண்டி பிரார்த்திப்பதுடன் அவரின் நினைவால் வாடும் மனைவி, பிள்ளைகள், உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

மாதகல் நலன்புரிச்சங்கம்,
பிரித்தானியக்கிளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



**அமரர். விஸ்வலிங்கம் பொன்னுத்துரை**
**( பிரான்ஸ் மாதகல் நலன்புரிச் சங்கம்)**

தேசம் கடந்தாலும்

பாசம் மறவாது

நேசம் கொண்டு தான் கற்ற பள்ளிக்காய்

மாசற்ற சிந்தையுடன்

ஓயாது உழைத்த

உழைப்பின் உறைவிடமே

எம் பள்ளியின் உயர்ச்சிக்காய்

சேவையால் உயர்ந்த கோபுரமே

காலன் உம்மை கவர்ந்ததினால்

கண்கலங்கி நிற்கின்றோம் இன்று.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**
யா/ மாதகல் சென்ஜோசப் மகாவித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்

1954 . 04 . 14



மறைவு

2013 . 07 . 18

*மாதகல் மண்ணின் மைந்தன்*

அமரர்

## திரு. விஸ்வலிங்கம் பொன்னுத்துரை

(மாதகல்)

எம்மோடு அன்போடு பழகிய
நாட்களை நினைக்கின்றோம்
பிறதேசம் சென்றாலும்
எம்மூரவரை நினைத்து
எம்மவர் கஸ்ரப்படும் வேளையிலே
நீயாக முன்னின்று உதவிகள்
பல செய்தாய்
காலன் உனை அழைத்துவிட்டான்
நாம் இங்கே உமை நினைத்து அழுகின்றோம்
உனது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினர்க்கு**
**எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

பிரிவால் துயருறும்
**பஜார் நண்பர்கள்**
மாதகல்.

23. 07. 2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



## அமரர் திரு. விஸ்வலிங்கம் பொன்னுத்துரை

அன்பானவர் அயலார் நெஞ்சங்களில் நிறைந்து வாழ்ந்தவர்
ஆடம்பர வாழ்வு நிலையற்றதென உணர்த்தியவர்
ஆருயிர் மனைவியிடம் அன்பைச் சொரிந்தவர்
பெற்ற பிள்ளைகளின் வாழ்வை நிலைப்படுத்தமுன்

காலன் விரித்த வலையில் சிக்கினாயோ
காலனைத்தேடிச் சென்றாயோ
உங்கள் உயிர் பிரிந்த செய்தியை
எம்மால் நம்பமுடியவில்லை
உமது இழப்பை எம் மனம் ஏற்க மறுக்கிறது

அன்னாரின் ஆன்மா சாந்தியடையவும் அவர் பிரிவால் வருத்தமடையும் மனைவி, பிள்ளைகள், உற்றார், உறவினர் மற்றும் நண்பர்களுக்கும் எங்கள் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**கண்ணீருடன்**

**இராசரத்தினம் குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



TO: AUNTY, VICTOR, VINOTH & VITHUSHA

OUR HEARTFELT CONDOLONCES
MAY THE COMFORT OF GOD
HELP YOU DURING THIS
DIFFICULT TIME

ELANGO & SUBALINI



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



**திரு. விஸ்வலிங்கம் பொன்னுத்துரை**

மலர்வு
14/04/1954
மறைவு
18/07/2013



நம்ப முடியவில்லை நம்ப முடியவில்லை
யாராலும் நம்ப முடியவில்லை
நீங்கள் இன்று எம்முடன் இல்லை - என்று
உன் உயிரை உயிராகக்காய்
ஒன்பது நாள் ஓர் முகமாய் பலமுகமாய்
பெரியோர் சிறியோர் என
பலபேர் சேர்ந்து பாசமாக பயமாக
காலையுடன் மாலையும் பரிந்தும்
பயன் ஏதுமின்றி
பாவிகள் ஆகிப் போனோம் நாம் எல்லோரும்
விஸ்வலிங்கம் என்றெடுத்த விஸ்வரூபம் நீ
விலை கொடுத்தும் வாங்க முடியா மனிதன் நீ
மாதாவின் நீ பிறந்தது
நமக்கு பெருமையா - அன்று
நீ பிறந்ததால் மாதாவுக்கு பெருமையா

அன்று தாய் நாட்டில்
மண் மீட்புக்காய் மல்யுத்தம் செய்து
மரணக் கயிறு வரை சென்று மீண்டு வந்தாய்
ஆனால் இன்று கொடிய நோய் வந்து
கொடூரன் கொடுமையாக கொன்று சென்று விட்டான்
அன்பான துணைவி
முத்தான மூன்று செல்வங்கள்
விட்டு விட்டுச் சென்று விட்டாய் - தனியாக
விம்மி விம்மி அழுகின்ற
கண்ணீர் துளிகளுக்கும் உயிர் இருந்திருந்தால்
உயிருடன் வந்திருப்பாய் - நீ

நாடுவிட்டு நாடு வந்தும் உன்
நற்பணி நிற்கவில்லை
நாலு புறமும் நல்லோரை சேர்த்து
நற்பணி மன்றம் அமைத்தாய்
எண்ண அடங்கா நற்தொண்டு செய்தாய்
நல்ல தலைவனாக நின்று எம்மை
நல் வழி படுத்தினாய்
ஆனால் இன்று எம்முடன் நீ இல்லை
உன் இடத்தைக்கூட நிரப்ப ஆளில்லை - இனி
என்றைக்கும் விட்டுச் சென்று விட்டாய்
அரிய சொத்துக்கள் பலவற்றை
காவியமாகவும் கலங்கரை
விளக்கு போல் என்றும் உன
ஆத்மா எம் எல்லோரையும்
சுற்றி சுற்றி திரியும்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!
அன்னாரின் பிரிவால் வாடும் குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த அனுதாபங்கள் சொல்லி
ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை வேண்டுகின்றோம்.

**சந்திரன் குடும்பம் பிரான்ஸ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு
14 . 04 . 1954



உதிர்வு
18 . 07 . 2013

## திரு. விஸ்வலிங்கம் பொன்னுத்துரை
(மாதகல்)

காலை எழுந்தவுடன் காதில் கேட்டது
காலன் உனை அழைத்த செய்தி
ஐயகோ இது தான் உன் விதியோ
கண்மூடி கண்விழிக்க கழிந்தது உன் வாழ்வு
கண்ணியமான பொன்னுத்துரையாய் கனிந்தது
உன் வாழ்வையா.....
கரை தேடும் அலைபோல உன்விழி
தேடி சென்றது ஏனையா
பொறுக்க முடியவில்லை பொங்குதையா
நெஞ்சம் எல்லாம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

பிரிவால் துயருறும்

காஞ்சிபுரம்
மாதகல்.

தியாகராசா குடும்பம்
செந்தூரன் குடும்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இன்று எட்டாத கொம்பனானாய் பொன்னண்ணா...

## திரு.விஸ்வலிங்கம் பொன்னுத்துரை
(தலைவர் பிரான்ஸ் மாதகல் நலன்புரிச்சங்கம்)


*பிறப்பு*
*14-04-1954*

*இறப்பு*
*18-07-2013*

மாதகல் தாயின் இளைய மகன்
சித்த மெல்லாம் தாயகத்தின் சித்திரத்தில் வைத்த மகன்
புத்தனைப்போல் வீட்டைவிட்டுப் புறப்பட்டுப் போன மகன்
நாட்டின் விடுதலைக்காய் நாளும் உழைத்த மகன் சிலரின்
சித்தம் தடுமாறிச் சிந்தனைகள் இடம்மாறி
பித்தம் பிடித்தேறி பேய் மனதில் குடியேறியதால்
அவன் மணநாள் தனிலே பூட்டுச்சிறைக்குள்ளே
போட்டு வதை பட்ட மகன் - அவன் ஆயுதமாய்
வைத்திருந்த காந்தி மகான் தந்த அகிம்சை எனும் கைவிளக்கை அணையாமல்
ஏந்திச் சுமந்து வந்து - இன்று எம் தலைவனாய் ஆன மகன்
அந்தச் செல்ல மகன் சிறப்புகள் ஒன்றல்ல பல
உறுதிகுலையாத ஒருவன் வன் கொடுமை வந்த போதும் - அஞ்சா நெஞ்சன்
மானம் பெரிதென்ற மகுடம் - அவன் தலையில்
மற்றோர் ஈனம் துடைக்கின்ற இறுமாப்பு - அவன் நெஞ்சில்
வானம் இடிந்தாலும் வளையாத மனம் முகத்தில்
எங்கள் கிராமத்தான் குணம்
தேகத்தில் எங்கள் கிராமத்தான் நிறம்
கண்களில் ஒரு கலா வெளிச்சம்
ஆழ உழுதது போல் அறிவோட்டம்
தன் புன் சிரிப்பால் எல்லோரையும் மயக்கும்
"புன்னகை என்ற பொன்னகை அணிந்த பொன்னண்ணா!!!"
அன்பு நேர்மை உண்மையே அவன் ஆயுதங்கள்
ஆல விழுது போல் அவன் வாழ்ந்தான்
நாமெல்லாம் வாழ்ந்து வந்தோம் அவன் கொடுத்த நிழலில் கீழே



கொண்ட கொள்கையிலே 'குமரனாகவும்'
சமூகசேவையிலே 'பொன்னராகவும்'
இருவேறுபட்ட பணிகளை நேர்வழியில் செய்து
வெற்றியும் பெற்றாய் - சாதி சமயத்தை வெறுத்தாய்
சக மனிதனையே கடவுள் என்றாய்
தீ துடை மூட நம்பிக்கைகள் யாவையும்
தீயிட்டு வேரறுக்கவே இங்கு உழைத்தாய்
ஏழில் செவ்வாயாம் ஏழரைச் சனியனாம்
குரு பார்வையில் வக்கிரமாம் - என்று
குறிப்போடு அலைந்தவரையெல்லாம்
நெருப் பெனவே நிமிர்ந்து பார்த்தாய்



எந்த நெறி? எந்த நெறி?
உலகின் கைகள் ஏற்கும் நெறி எந்த நெறி?
பிறரை வெல்லத்தேர்ந்த நெறி எந்த நெறி?
உலகம் இன்று தேடும் நெறி எந்த நெறி" பொன்னண்ணா
உன் சாந்த நெறி அந்த நெறி
உண்மையோடு நீ சார்ந்த நெறி அந்த நெறி
உன்போல் அன்பால் ஈர்க்கும் காந்த நெறி அந்த நெறி
என்று வாழ்ந்த காட்டினாய் பொன்னண்ணா

நீ நெருப்பு பொறுப்புக்கள் வகித்தவன் - துயர் செய்யும் பகையையும் மதித்தவன்
சாதனைகள் பற்பல செய்தவன் - பிறர் வேதனை தீர்த்திட முயன்றவன்
அதில் வெற்றியும் கண்டு துயில்பவன் சிந்தனைப்பாதையில் தூதவன்
இன்று எமைத்தனிமரமாக்கிய தலைமகன்

முன்பு ஒரு சமயம் எமது அறியாமையாலும் அறிந்துகொள்ளும் ஆவலாலும்
உனைக்கேட்கிறோம் 'நல்ல தலைவன் என்பவன் யார்?' என்று உன் உதட்டருகில்
பரவியிருந்த உன் நரைத்த கம்பீரமான மீசையையும் தாடியையும்
கையால் நீவி விட்ட படியே உனக்கே மட்டும் உரித்தான புன்சிரிப்போடு
நீ சொன்னாய் 'நல்ல தலைவன் என்பவன் தொண்டனுக்கும்
தொண்டன்' என்றாய் நிமிர்ந்து பார்த்தோம் - உனை வியந்து பார்த்தோம்
உண்மையில் நீ ஒரு மகான் - உன்



முகத்தில் இருப்பது நரைத்த முடிகள் அல்ல - உன்னுள்
நிரம்பித்ததும்பும் நீ பெற்ற
அனுபவத்தின் நுரைகள் - பொன்னண்ணா - அது அனுபவத்தின் நுரைகள்
அன்று நதியாய் நாம் குதித்தோடிய நாட்களும்
பூவாய்ச் சிரித்திருந்த பொழுதுகளும் - உன்னோடு நாம் வார்த்தைகளால்
வாள்வீச்சு நடத்திய சம்பவங்களும் - இன்று
எம் ஞாபகங்கள் - ஞாபகங்கள் - ஞாபகங்கள் மட்டுமே

பத்து நாட்கள் - நீ உயிர் கொண்டு உறங்கிய போது
இது எங்கள் பீஷ்மரின் படுக்கை காத்திருக்கும் கணங்களுக்கும்
மீண்டும் எமைக் கையணைக்கும் என காத்திருந்தோமே
ஏமாற்றிவிட்டாயே பொன்னண்ணா! எங்கள்
வானத்தில் இந்த வட்டநிலா வந்த நடமும்
பால்மழையை எம்மீது அள்ளி இறைத்த சுகமும்
இல்லை என - இன்று நீ மாயமாய் போனதென்ன பொன்னண்ணா
உன் புன்சிரிப்பால் எம்மைக் குளிப்பாட்டி பாச மழை பொழிந்ததெல்லாம்
கண்மூடி நாம் கண்ட கனவாச்சே பொன்னண்ணா

தூக்கமறுத்து துடிக்கின்ற கண்களோடும் ஏங்கித் தவிக்கும் இதயங்களோடும்
நீ போன கதை எண்ணி புலம்புகின்றோம் பொன்னண்ணா... எம் கண்கள்
இன்னும் உனைக் காணத் துடிக்கிறதே பொன்னண்ணா
இன்று எட்டாத கொம்பனானாய் பொன்னண்ணா
இனி நீ இவ்வுலகில் எமக்கெல்லாம் கிட்டாக்கனியானாய்
பொன்னண்ணா... இனி நீ கிடைப்பாயா பொன்னண்ணா

இங்கு மெழுகாய் விழியுருக மெய் உருக்கி நெஞ்சுருகி நெஞ்சுருகி
உன் காலடியில் நின்று கதறுகிறோம் பொன்னண்ணா - எங்களுக்காக
ஒருதரமேனும் விழி மலருங்கள் பொன்னண்ணா - இல்லை எனில்
உங்கள் நெஞ்சுரத்தின் ஒரு துகளை எனும் தூக்கி வெளியே எறியுங்கள்
பொன்னண்ணா தாங்கள் அமைதிபெற - உன் பணி தொடர்ந்து செல்ல
மாறா மனமும் - நெஞ்சில் உறுதியும் - நிமிரும் சக்தியும்
நீதான் எமக்கருள வேண்டும் உன் காலடியில் தவமிருக்கிறோம் பொன்னண்ணா
வல்லமை தருவாயென எமக்கு எல்லாம் வல்லமை தருவாயென

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரான்ஸ் மாதகல் நலன்புரிச்சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

வெளிநாட்டு மாதகல் நலன் புரிச்சங்கங்களின் செயற்பாட்டாளர்

அமரர்

விஸ்வலிங்கம் பொன்னுத்துரை

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 14 | 18 |
| 04 | 07 |
| 1954 | 2013 |



விஸ்வலிங்கம் பொன்னுத்துரை அவர்களின் மறைவிற்கு கண்ணீர் அஞ்சலி

19.07.2013

பிரிவைப்பகிரும்
மாதகல் நலன் புரிச்சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம் | மறைவு



14.04.1954 | 18.07.2013

## திரு விஸ்வலிங்கம் பொன்னுத்துரை
## (மாதகல்)

எம்மின சிறார்களைக் காக்க ஓடி வந்து எமக்குத் தோழ் கொடுத்த தோழன் நீர்
மனித நேயத்தைக் காப்பதே இலட்சியமாகக்
கொண்டவன் நீர்.

போரினாலும் இயற்கை அனர்த்தத்தாலும் பாதிக்கப்பட்ட எம்மின சிறார்களைக் காக்க
சுனாமி சிறுவர் உதவி நிலையம் உருவாக்கம் பெற்ற வேளை பல
ஆலோசனைகளை எமக்கு அளித்து தைரியத்தையும் நம்பிக்கையையும் ஊட்டிய
ஆசான் நீர்.

சுனாமி சிறுவர் உதவி நிலையம் சரியான பாதையில்
சரியான நெறிப்படுத்தலுடன் செயற்பட எப்போதும் உறுதுணையாகவும்
அதன் வளர்ச்சியில் பங்காளனாகவும் பணியாளனாகவும்
செயற்பட்டவன் நீர்.

உம்மின சிறார்களின் எதிர்கால வாழ்வை வளமாக்க இரவு பகல் என
உடல் உள நிலை பாராது சுனாமி சிறுவர் உதவி நிலையம் நடாத்தும் வருடாந்த
விழாவை பிரான்ஸ் நாட்டிலிருந்து வருகை தந்து சிறப்பித்தமை
என்றும் எம் நெஞ்சை விட்டு அகலாத நினைவுகள்.

பிரான்ஸ் மண்ணிலும் சுனாமி சிறுவர் உதவி நிலைய சிறார்களின் எதிகால
வாழ்விற்காக அங்கத்தவர்களை இணைத்து மகத்தான
சேவை புரிந்தவன் நீர்.

ஒவ்வொரு மானிடர்க்கும் மரணம் என்பது உறுதி.
ஆனால் உன் போன்று மனித நேயத்தைக் காத்தவன் மரணிப்பது இல்லை.
நீர் ஆற்றிய சேவைகளும் உமது நினைவுகளும் எம் உள்ளங்களில் வாழ்ந்து
கொண்டுதான் இருக்கும்.

கொள்கையும் உறுதியும் கொண்டவன் எப்போதும் மக்களின் மனங்களில்
வாழ்ந்துகொண்டிருப்பான்

உமது பிரிவு என்பது எம்மால் ஆற்றுப்படுத்த முடியாத ஒன்று.
எமது கண்ணீர் அஞ்சலியை..........
உமக்கு சமர்ப்பணம் ஆக்குகின்றோம்

Ranjith 0041798725556 . Kamal 0041774433501 Ravi 0033650383546



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுளும் நானும்

பிறப்பின் வருவது யாதெனக் கேட்டேன்
பிறந்து பாரெனா இறைவன் பணித்தான்
படிப்பெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்
படித்துப் பாரென இறைவன் பணித்தான்
அறிவெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்
அறிந்து பாரென இறைவன் பணித்தான்
அன்பெனப்படுவது யாதெனக் கேட்டேன்
அளித்துப்பாரென இறைவன் பணித்தான்
பாசம் என்பது யாதெனக் கேட்டேன்
பகிர்ந்து பாரென இறைவன் பணித்தான்
மனையாள் சுகமெனில் யாதெனக் கேட்டேன்
மணந்து பாரென இறைவன் பணித்தான்
பிள்ளை என்பது யாதெனக் கேட்டேன்
பெற்றுப் பாரென இறைவன் பணித்தான்
முதுமை என்பது யாதெனக் கேட்டேன்
முதிர்ந்து பாரென இறைவன் பணித்தான்
வறுமை என்பது யாதெனக் கேட்டேன்
வாடிப்பாரென இறைவன் பணித்தான்
இறப்பின் பின்னது ஏதெனக் கேட்டேன்
இறந்து பாரென இறைவன் பணித்தான்

அனுபவித்தேதான் அறிவது வாழ்க்கையெனில்
ஆண்டவனே நீ ஏன் எனக்கேட்டேன்



ஆண்டவன் சற்றே அருகு நெருங்கி
**அனுபவம் என்பதே**
**நான் தான் என்றான்.**
**- கண்ணதாசன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அமரர் திரு. வி. பொன்னுத்துரை அவர்களின் நினைவாக... "பொன் மலர்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவிலல்

'எந்நன்றி கொன்றாற்கும் உய்வுண்டாம்
உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு"

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து எமது நல் வாழ்விற்கு வித்திட்டு ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்திவிட்டு 18. 07. 2013 அன்று மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வம் அமரர் விஸ்வலிங்கம் பொன்னுத்துரை அவர்கள் இறைவனடி எய்திய செய்தி கேட்டு ஓடோடி வந்து சகல உதவிகளையும் செய்த உற்றார், உறவினர், நண்பர்கள், மற்றும் அன்னாரின் துயரச்செய்தி கேட்டு தொலைபேசி மூலம் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்களுக்கும், இரங்கல் கூட்டம் நடத்திய நண்பர்களுக்கும் மலர் வளையங்கள் சாத்தி அஞ்சலி செலுத்திய அனைவருக்கும், அமரரின் ஈமக்கிரியைகளிலும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் பங்குபற்றியவர்களுக்கும், இப்பொன் மலரை வெளியிட உதவிய அன்பர்களுக்கும் அச்சிட்ட பண்டத்தரிப்பு **J. S.** அச்சகத்தினருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நன்றி



**நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்**

**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்

விஸ்வலிங்கம் + தெய்வானை

- சங்கரப்பிள்ளை + கற்பகம்
- செல்லத்துரை (அமரர்) + சின்னதங்கம் (அமரர்)
  - சிவறஞ்சினி (அமரர்)
  - ரவிச்சந்திரன்
  - இரத்தினேஸ்வரி
  - இராசகுமாரி
- சின்னத்துரை + நாகரத்தினம்
  - உதயவேலரசி
  - கடம்பவேலரசி
  - பத்தமவேலரசன் (அமரர்)
  - பத்மப்பிரியா
- **பொன்னுத்துரை**

அம்பலவாணர் + இராசம்மா

- இரத்தினேஸ்வரி
- சுந்தரலிங்கம் + பரமேஸ்வரி
  - தாட்சாயினி
  - சுரேஸ்
  - அச்சுதன்
- கணேசலிங்கம் + வில்வராணி
  - முகுந்தன்
  - வாசுகி
  - சிந்துஷா
  - நிரோஜன்
  - ஜனனி
- புவனேஸ்வரி + தியாகராசா
  - துஷ்யந்தன்
  - இளங்கோ
  - மதுராந்தகி
  - செந்தூரன்


**பொன்னுத்துரை** + இரத்தினேஸ்வரி

- விக்டர் (பொறியியல் பீடம் 4ம் ஆண்டு)
- வினோத் (மருத்துவ பீடம், ஆரம்பக்கல்வி மாணவன்)
- விதுஷா (விஞ்ஞானப் பிரிவு மாணவி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org